නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය පුහුණු අමාත්‍යාංශය
திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழிற் பயிற்சி அமைச்சு
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING

ජාතික ආධුනිකත්ව සහ කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය
தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
National Apprentice & Industrial Training Authority









2019

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT

971. ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, වැලිකඩ, රාජගිරිය.
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,வெலிக்கடை, இராஜகிரிய.
971, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya



தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2019

உள்ளடக்கம

தலைவரின் செய்தி	01 - 02
முகவுரை	03
வரலாறு	04 - 05
அறிமுகம்	06 - 07
தூர நோக்கும் பணிக்கூற்றும்	08
2019.....	09 - 11
1. நிறுவன தகவல்கள்	12 - 13
2. நிர்வாகக் குழு	14 - 15
3. பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள்	16 - 17
4. மாவட்ட முகாமையாளர்கள	18
5. நிர்வாகக் கட்டமைப்பு	19
6. அதிகார சபையின் நோக்கம்	20
7. அதிகார சபையின் பிரதான செயற்பாடுகள்	20
8. பயிற்சி முறை மற்றும் ஏனைய பிரதான வேலைத்திட்டங்கள்	21 - 25
9. தரவு விபரிப்பும் பகுப்பாய்வும்	26 - 60
10. ஏனைய செயற்பாடுகள்	61 - 80
11. இறுதி கணக்கறிக்கை	81 - 88
12. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும் பதில்களும்	89 - 99

தலைவரின் செய்தி.....

விஷேட திறன்களுடைய இளைஞர்களையும் மற்றும் யுவதிகளையும் இலக்காகக் கொண்டு கைத்தொழில் மைய தொழில்களையும் மற்றும் தொழில் பயிற்சிகளையும் வழங்கும் முக்கிய குறிக்கோளுடன் எமது இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. தமக்கு இருக்கின்ற ஆற்றல்களையும் மற்றும் பணி சார்ந்த சூழலையும் சிறந்த முறையில் அனுகூலமான முறையில் பயன்படுத்தி பணி நிலையத்தில் பயிற்சிகளைப் பெறுகின்ற பயிலுநர்கள் இந்தத் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பிரத்தியேக தனித்துவ அடையாளத்தை தொழில் பயிற்சிப் பிரிவில் நிலைநாட்டுவதற்கு பங்களிப்பு செய்கின்றனர்.

இந்த அதிகர சபை தேசிய பயிலுநர் பயிற்சி சபையாக 1971 இன் 49 ஆம் இலக்க தேசிய பயிலுநர் பயிற்சி பற்றிய சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர், இது 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வித் திட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை என பெயரிடப்பட்டு தாபிக்கப்பட்டுள்ளது. இது மேலும் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் மற்றும் தொழிற்பாடுகளையும் மிக சரியான முறையில் புரிந்து கொண்டு அவற்றை வியாபித்து அபிமானத்துடனும் பெருமையுடனும் 48 ஆண்டுகள் காலமாக தனது தனித்துவத்தை நிலைநாட்டி தொழில் பயிற்சிப் பிரிவினுள் மேலும் பாரிய பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது.

இந்த ஆண்டு காலப் பகுதியில் பல நிறுவகங்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொண்டதன் மூலமாக பயிலுநர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளையும் மற்றும் தொழில் வாய்ப்புகளையும் மேலும் அதிகரிக்க எமது அதிகார சபையால் முடிந்திருந்தது. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய ஒரு பயிற்சி நியைத்தையும் ஆரம்பிக்க முடிந்தது.

இது தவிர, இந்த ஆண்டு காலப் பகுதியில், பயிலுநர்கள் சேர்த்துக் கொள்வதை இரண்டு மடங்குகளாக அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை சகல மாவட்டங்களிலும் செயற்படுத்துவதற்கு முடிந்தமையும் இந்த ஆண்டு காலப் பகுதியில் பயிலுநர்களுக்கு அதிகளவான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள உகந்த உன்னத நடவடிக்கையாக கருத முடியும்.

குறித்த இந்த ஆண்டு காலப் பகுதியில், தேசிய பல்கலைக்கழகங்களின் தலைவர்களை அழைத்து தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ள பல்கலைக்கழகப் பட்டப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் இணைந்துள்ள பட்டதாரி மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கு முடிந்தமையும் மற்றும் ஒரு சில பயிற்சிகளுக்காக பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்க முடிந்தமையும் பாராட்டத்தக்க ஒரு விடயமாக நான் கருதுகின்றேன்.

இந்த ஆண்டு காலப் பகுதியில் இந்த அதிகார சபையின் சகல பயிற்சி செயற்பாடுகளும் மற்றும் அத்தகைய செயற்பாடுகள் பற்றிய சகல தகவல்களும் கணனி வலையமைப்பில் உள்ளீக்கப்பட்டு பயிற்சிக் கண்காணிப்பு முறைமை தாபிக்கப்பட்டதன் மூலமாக இந்த அதிகார சபையின் கண்காணிப்பு சார்ந்த செயற்பாடுகளை மேலும் வலிமைப்படுத்த முடிந்தது. அத்தகைய விடய அம்சங்களை இற்றைப்படுத்த முடிந்தமையின் மூலமாக மிகவும் சரியான ஒரு முறையியலின் ஊடாக இந்த அதிகார சபையின் தாபனம் சார்ந்த விடயங்களை மேற்கொண்டு நிறைவேற்ற முடிந்தமையும் நான் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக கருதுகின்றேன்.

இந்த ஆண்டு காலப் பகுதியில் அமைச்சரவை பல தடவைகளில் அவ்வப்பொழுது நியமிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருந்த பல கஷ்டங்களுக்கு வெற்றிகரமாக

முகம்கொடுத்து சேவைகளை நாடும் தரப்புகளின் தேவைகளை தனது குறிக்கோள்கள் மற்றும் கரும பணிகள் என்பவற்றின் மூலமாக இந்த அதிகார சபையினால் பூர்த்தி செய்ய முடிந்துள்ளது. இந்த சகல கரும பணிகளையும் மேற்கொண்டு நிறைவேற்றும் போது பதவியணி ஊழியர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும், அரச துறை நிறுவனங்களினதும் மற்றும் தனியார் துறை நிறுவகங்களினதும் பெரும் ஒத்துழைப்பும் கிடைப்பதையும் உண்மையில் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த வருடாந்த அறிக்கையின் மூலம் இந்த அதிகார சபை 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்திய செயற்பாடுகளின் முன்னேற்றங்களை விரிவாக குறிப்பிடும் என்பதில் ஐயமில்லை.

இந்த அதிகார சபையின் பதவியணி ஊழியர்கள் மேற்கொண்டு நிறைவேற்றிய கரும பணிகளுக்காக அவர்களுக்கும் மற்றும் பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்த பல அரச துறை நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் துறை நிறுவகங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தலைவர

முகவுரை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தினது 14 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அதிகார சபையின் மூலம் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

இந்த அறிக்கையில் 3 பாகங்கள் உள்ளடங்குகின்றன. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள் பற்றிய விபரங்கள், பயிற்சிகள் சம்பந்தமான அபிவிருத்தி விடயங்கள் மற்றும் குறித்த வருடத்திற்குரிய சுருக்கமான வருடாந்த கணக்கு அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையிலுள்ள விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கி இந்த வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை தயாரிக்கும் முகமாக நாடு முழுதிலும் இயங்கி வருகின்ற 25 மாவட்ட அலுவலகங்களின் முகாமையாளர்கள் மற்றும் தேசிய நிறுவகங்களின் தலைவர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அந்தந்தப் பிரிவுகளின் பிரிவுத் தலைவர்கள் ஆகியோர் வழங்கிய தகவல்கள் இதன் போது அடிப்படையாகக் கெ-ாள்ளப்பட்டன. அந்த உரிய தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு சுருக்கமாக இந்த அறி-க்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

2019

வரலாறு

1. இற்றைக்கு சுமார் 48 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்டிருந்த இளைஞர் புரட்சிக்கு ஒரு பரிகாரமாக அரசாங்கம் தலையீட்டு நடவடிக்கையை மேற்கொண்டதன் அடிப்படையில் 1971 இன் 49 ஆம் இலக்க தேசிய பயிலுநர் பயிற்சி பற்றிய சட்டத்தின் கீழ் ஒரு தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபை தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சர்வதேச தொழில் அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பயிலுநர் பயிற்சி பற்றிய பாடநெறிகளைத் தயாரித்தல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தர நியமங்களை நிர்ணயித்தல், தொலைக் கல்விற்குரிய அறிவுரை ஆவணங்களை தயாரித்தல், தேசிய தொழில் நுட்பத் திறன் சான்றிதழ்களை வழங்குதல் போன்ற பல அம்சங்கள் தொடர்பான குறிக்கோள்கள் வெற்றிகரமாக இந்தத் தேசிய பயிலுநர் பயிற்சி சபையின் கீழ் அடையப்பட்டுள்ளன.

2. 1983 ஆம் ஆண்டில், முதலாவது தேசிய பயிற்சி நிறுவமாக பயிலுநர் பயிற்சி நிறுவகமானது ஜேர்மனிய குடியரசின் உதவியுடன் இலக்கம் 581, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ எனும் இடத்தில் தாபிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் இரண்டாவது தேசிய பயிற்சி நிறுவகம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உலக தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து தொழில் நுட்பவியலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவகம் என்ற பெயரில் 18-வது மைல், பன்சலை வீதி, கட்டுநாயக்க எனும் இடத்தில் தாபிக்கப்பட்டது.

3. 1989 ஆம் ஆண்டில் மூன்றாவது தேசிய பயிற்சி நிறுவகமாக ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் மோட்டார் வாகனப் பயிற்சி நிறுவகம் இலக்கம் 07, டாக்டர் டெனிஸ்டெர் த சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டிய எனும் இடத்தில் தாபிக்கப்பட்டது.

4. இந்த நிறுவகத்தின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி பற்றிய சட்டத்தின் ii ஆம் பாகத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகார சபை என்ற பெயரில் தாபிக்கப்பட்டது.

5. அதன் பின்னர் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகார சபையின் நிருவாகம் மாகாண அலுவலகங்களாக பன்முகப்படுத்தப்பட்டது. மேலும், இந்த நிருவாக விடயம் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்கள் என பரிணமித்தது.

6. மூன்றாம்நிலைக் கல்வி பற்றிய சட்டத்தின் பிரகாரம், பொறியியல் பட்டத்தை வழங்கும் நிறுவகம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகம் ஆகியவற்றினால் நடத்தப்படும் உயர் பாடநெறிக்குரிய எந்திரப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

7. நான்காவது தேசிய பயிற்சி நிறுவகத்தை ஜேர்மனிய குடியரசின் GIZ மற்றும் KFW நிறுவகங்களின் நிதி உதவியின் பேரில் கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்கு 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 04 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

8. 2014 ஆம் ஆண்டு முதல் ஏனைய வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகங்களில் இருந்து பயிற்சிப் பாடநெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு ஆறு மாத வேலை வாய்ப்புப் பயிற்சி இந்த அதிகார சபையின் மூலம் வழங்கப்படுகின்றது. குறிப்பாக தொழில் நுட்பக் கல்லூரிகள், இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப் பட்டுள்ள அரச துறை நிறுவனங்களில் / தனியார் துறை நிறுவகங்களில் இருந்து தொழில் பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் நுட்பப் பிரிவில் செயன்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கும் நிமித்தம் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9. நான்காவது தேசிய பயிற்சி நிறுவகமாக இலங்கை ஜேர்மன் பயிற்சி நிலையம் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

10. இந்த அதிகார சபை அவ்வப்பொழுது பல கருத் திட்டங்களுடன் இணைந்து காலத்திற்கேற்றவாறு பயிற்சி செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் முகமாக தேவையான வசதிகளைப் பெற்றுக் கொண்டு அந்த வசதிகளை நிறுவகத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பயன்படுத்துகின்றது.

11. இந்த அதிகார சபையின் சகல பயிற்சி விடயங்களும் மற்றும் அந்த விடயங்கள் பற்றிய சகல தகவல்களும் கணனி வலையமைப்பில் உள்ளீக்கப்பட்டு பயிற்சிக் கண்காணிப்பு முறைமை (T.M.S. Training Monitoring System) 2019 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

12. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு தற்பொழுது 13 வருட தொடர் கல்வி முயற்சியின் கீழ் கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்து தேசிய வாழ்க்கைத்தொழில் திறன் மட்டம் (IV) என்றழைக்கப்படும் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அறிமுகம்

சட்டமுறையான கட்டமைப்பு

1971 இன் 49 ஆம் இலக்

க தேசிய பயிலுநர் பயிற்சி பற்றிய தேசிய சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் பயிற்சி சபையாக ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி பற்றிய சட்டத்தின் பிரகாரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகார சபை என்ற பெயரில் தாபிக்கப்பட்டது.

தனது உரிய கரும பணிகளை உரிய முறையில் நிறைவேற்றி பெருமையுடன் 47 வருடங்களை தாண்டிச்செல்லும் எமது அதிகார சபை 1971 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பிரிவினுள் நகர்ந்த பயணத்திற்கு மாபெரும் வலிமை சேர்த்த பிரிவுகளையும் சற்று நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

1. பயிற்சிப் பிரிவு

பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளும் பிரிவு, பயிற்சிப் பிரிவு, எந்திரப் பயிற்சிப் பிரிவு, தொழில்வாய்ப்பு பயிற்சிப் பிரிவு, வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் பிரிவு முதலிய முக்கிய பிரிவுகள் அடங்கிய பயிற்சிப் பிரிவு 25 மாவட்டங்களின் ஊடாக ஒட்டுமொத்த இலங்கையிலும் பயிற்சி விடய அம்சங்கள் பற்றிய திட்டங்களை தயாரித்தல், கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பேணிச்செல்லல் முதலிய குறிக்கோள்களை அடையும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது.

2. தர நியமப் பிரிவு

பாடவிதான அபிவிருத்திப் பிரிவு, தர முகாமைத்துவப் பிரிவு, தேசிய வாழ்க்கைத் தொழில் பரீட்சைப் பிரிவு, தேசிய தொழில் தகைமைப் பரீட்சைப் பிரிவு, மதிப்பீட்டுப் பிரிவு, சான்றிதழ்கள் வழங்கும் பிரிவு போன்ற முக்கிய பிரிவுகள் அடங்கிய தர நியமப் பிரிவு, பயிற்சிப் பிரிவின் செயற்பாடுகளை மிகவும் முறையாகவும் மற்றும் வினைத்திறன் வாய்ந்ததாகவும் நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்களை அபிவிருத்தி செய்து, பயிலுநர்களினதும் மற்றும் இந்த அதிகார சபையினதும் தரத்தை மேம்படுத்தத் தேவையான கருவிசாதனங்களை ஏற்பாடு செய்து அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பெரும் வலிமையை பெற்றுத் தருகின்றது.

3. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

சகல மாவட்ட அலுவலகங்கள், தேசிய நிறுவகம், நிருவாகம், தர நியமம், நிதி மற்றும் பயிற்சி முதலிய சகல பிரிவுகளையும் உள்ளடக்கி அத்தகைய பிரிவுகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை, தரவுகள் முகாமைத்துவ முறைமையின் ஊடாக பெற்றுக் கொண்டு மாதாந்த முன்னேற்ற அறிக்கை, காலாண்டு ரீதியான அறிக்கை, வருடாந்த அறிக்கை மற்றும் தேவைக்கு ஏற்ப ஏனைய அறிக்கைகள் முதலிய அறிக்கைகளைத் தயாரித்து நிரல் அமைச்சு அடங்கலாக ஏனைய அரச நிறுவகங்களுக்கும் மற்றும் அரச சாரா நிறுவகங்களுக்கும் தேவையானவாறு தகவல்களைப் பெற்றுக் கொடுத்து தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகார சபையை வெளிக்கள சூழலுடன் ஒருங்கிணைக்கும் வகையில் செயல்படுகின்றது.

மேலும் இந்த அதிகார சபையின் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு தேவையான கூட்டிணைந்த திட்டம், செயல் திட்டம் மற்றும் தேவையின் பேரில் பல விதமான திட்டங்கள் முதலிய திட்டங்களை தயாரிப்பது இந்தப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். அதே போல், இந்த அதிகார சபையின் பயிற்சிகள் மற்றும் பயிற்சிகள் சம்பந்தமான கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் முதலிய விடய அம்சங்களும் இந்தப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. மேலும், பயிற்சிகளுக்குத் தேவையான சகல

தகவல்களையும் மற்றும் ஊழியர்கள் பற்றிய தகவல்களையும் சேகரிப்பதற்கு பொருத்தமான முகாமைத்துவ தகவல் முறைமையை தயாரித்தல் மற்றும் அதனை நிருவகித்தல் முதலிய அம்சங்களும் இந்தப் பிரிவின் முக்கிய பொறுப்புப் பணிகளாகும்.

4. நிருவாகப் பிரிவு

பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளும் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு மற்றும் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புப் பிரிவு, சட்டப் பிரிவு, ஊழியர்கள் பயிற்சிப் பிரிவு முதலிய முக்கியமான பிரிவுகள் இந்தப் பிரிவில் அடங்குகின்றன. இந்தப் பிரிவு மனித வளங்களையும் மற்றும் பௌதீக வளங்களையும் வினைத் திறன் வாய்ந்த்தாக நிருவகித்து அந்த வளங்களை பயன்படுத்தி இந்த அதிகார சபையின் எதிர்காலப் பயணத்திற்கு பெரும் பங்களிப்பை செய்கின்றது.

5. நிதிப் பிரிவு

பெறுகைப் பிரிவு, களஞ்சியப் பிரிவு, கொடுப்பனவுப் பிரிவு, சம்பளப் பிரிவு மற்றும் புத்தகம் கட்டும் பிரிவு முதலிய முக்கியமான பிரிவுகள் இந்த நிதிப் பிரிவில் உள்ளடங்குகின்றன. திட்டமிடல் பிரிவின் மூலம் வருடாந்தம் தயரிக்கப்படும் செயல் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் ஆகிய திட்டங்களுக்கு இணங்க தயாரிக்கப்படும் வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தினது ஏற்பாடுகளை சரியாக செயற்படுத்தி இந்த அதிகார சபையின் சகல செயற்பாடுகளையும் உடனுக்குடன் இணைத்து முன்னெடுக்க பெரும் பங்களிப்பு செய்கின்றது.

6. கணக்காய்வுப் பிரிவு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கணக்காய்வு விடயங்களைக் கவனித்து கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம், நிரல் அமைச்சு ஆகியன உள்ளிட்ட ஏனைய நிறுவகங்களுடன் இணைந்து செயல்படுகின்றது. இந்தக் கணக்காய்வுப் பிரிவு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அதிகார சபையினது செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை முறையாகப் பேணும் பொருட்டு கணக்காய்வு குழுவை ஒருங்கிணைத்து முகாமைத்துவத்திற்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்து பெரும் செயற்பணியை செய்து நிறைவேற்றுகின்றது.

<u>இயக்கச் செயற்பாடுகள்</u>

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி பற்றிய சட்டத்திற்கு இணங்க இந்தத் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்கள் பிரகாரம் குறித்த சட்டத்தின் 37(1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் முகமாக இந்த அதிகார சபை தனது இயக்கச் செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது.

இதன் நிமித்தம் பயிற்சி எண்ணக்கருவின் கீழ் 04 தேசிய நிறுவகங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி சம்பந்தமான நிறுவகங்கள் மற்றும் ஏனைய அரச, தனியார் துறை நிறுவகங்கள் என்பவற்றின் பங்களிப்பில் கைத்தொழில் மைய பயிற்சிகளை இந்த அதிகார சபை வழங்குகின்றது.

பயிற்சிக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல், மேற்பார்வை செய்தல், கண்காணிப்பு செய்தல், சான்றிதழ் வழங்கல் முதலிய பல பிரிவுகளின் கீழ் நேரடியாக பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர முகாமைத்துவம், நிருவாகம், ஊழியர் பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, நிதி மற்றும் கணக்காய்வு முதலிய விடய அம்சங்களும் இந்த செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

எமது நோக்கு

மனித வள அபிவிருத்தியின் ஊடாக, இலங்கை செழுமையை அடைவதற்கு, தாக்கமுள்ள பங்களிப்பினைச் செய்து அதி திறன் பயிற்சியினை வழங்கும் அமைப்பாக உருபெறுதல்.

எமது ஏற்புப் பணி

கைத்தொழிற் துறையிலான தேர்ச்சி பெற்ற மனிதவலுத் தேவைக்கு முகம் கொடுக்கும் வகையில், உயர்ந்த தொழிற்சார் நியமங்களுடனான, நன்றே உருவாக்கப்பட்ட தேர்ச்சிகளை தன்னகத்தே கொள்வதற்காய், இளம் பராயத்தினருக்கு வாழ்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.

2019.....

கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி	23,358
கேந்திர மைய இரட்டைப் பயிற்சி	5,293
தேசிய நிறுவகப் பயிற்சி	2,332
தொழில் வாய்ப்புப் பயிற்சி (வேறு பயிற்சி நிறுவகங்கள்)	12,872
விஷேட கைத்தொழில் திறன் பயிற்சி	11,365

- பயிலுநர்கள் சேர்த்துக் கொள்வதை இரு மடங்குகளாக அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் முன்னெடுக்கப்பட்டது.

- "மூன்று சக்கரங்களிலிருந்து நான்கு சக்கரங்கள்" என்ற தொணிப்பெருளின் கீழ் ஒரு விஷேட நிகழ்ச்சித் திட்டம் முற்சக்கர வண்டி சாரதிகளுக்காக அறிமுகப் படுத்தப்பட்டது. முற்சக்கர வண்டி சாரதிகளின் தனியாள் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு அவர்களின் திறன்களை அதிகரித்து அவர்கள் வேறு பிற தொழில்களில் ஈடுபடும் வகையில் அவர்களை திறனாளிகளாக மாற்றுவது இந்த நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான நோக்கமாகும்.

- காகில்ஸ் சிலோன் தனியார் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க சூப்பர் விற்பனை நிலைய நுகர்வோர் சேவை உதவியாளர்கள், காசாளர்கள் மற்றும் தரவுகள் உள்ளீர்த்தல் இயக்குநர் போன்ற பதவிகளுக்கு பயிலுநர் முறையில் தொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்தக் கருத்் திட்டத்தின் மூலம் 2000 தொழில் வாய்ப்புகள் உருவாகின.



- தரமான ஒரு சுகாதார சேவையை வழங்கும் பொருட்டு மனித வளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக தனியார் வைத்தியசாலைகள் ஒழுங்குறுத்துகை சபையுடன் ஒரு விஷேட கலந்துரையாடல் 2016.03.25 ஆம் திகதி நடத்தப்பட்டது.

- மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகரத்தில் ஒரு புதிய பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர்களிடத்திலும் மற்றும் யுவதிகளிடத்திலும் அதிக கேள்வி நிலவும் ஹோட்டல் துறை, மோட்டார் சைக்கில் தொழில் நுட்பம் மற்றும் முற்சக்கர வண்டித் தொழில் நுட்பம் போன்ற பாடநெறிகள் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டன.







- இந்த ஆண்டு காலப் பகுதியினுள் மவுண்ட் லேவினியா ஹோட்டல், இலங்கை மகளிர் பணியகம், CIDA மற்றும் NHDA, இலங்கை தகவல் தொழில் நுட்பக் கைத்தொழில் சம்மேளனம், முன் சிறுவர் பராய அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முகாமைத்துவப் பிரிவு, ப்ரன்டடிக்ஸ் எப்பரெல் சொலூஷன்ஸ் லிமிற்றட் கம்பனி போன்ற தாபனங்களுடன் 06 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.



- இலங்கை அரசாங்கத்தின் பல்கலைக்கழகத் தொழில் நுட்ப பாடங்கள் மைய பட்டப்படிப்பை பின்பற்றிய (1975) முதலாவது மாணவர் குழுவுக்கு தொழில் வாய்ப்புப் பயிற்சிகளை (OJT) பெற்றுக் கொடுப்பது தொடர்பான விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் களணிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், ரூஹனு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், ரஜரட்டை பல்கலைக்கழகம், சபரகமுவா பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழங்களின் பீடாதிபதிகள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலில் நடத்தப்பட்டது.

- சுகாதாரத் துறை நவீன சர்வதேச பயிலுநர் பயிற்சி நிறுவகம் ஒன்றைத் தாபிப்பது தொடர்பாக ஜேர்மனியின் பிரதிநிதிகள் குழுவுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த அதிகார சபையிலிருந்து வெற்றிகரமாக பயிற்சிகளை நிறைவு செய்கின்ற பயிலுநர்களை நேரடியாக ஜேர்மனியின் ஊழியர்படையில் பணிக்கமர்த்தத் தீர்மானிக்கப்பட்டது.



- சூரிய சக்தி மின்னுற்பத்திப் பலகை மாதிரிகளை உற்பத்தி செய்யும் பொருட்டு எடு-ட்ரேனிங் நிறுவகத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க, 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் BMICH மண்டபத்தில் ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டது. இந்த வேலையரங்கு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் வழிகாட்டலில் எமது அதிகார சபையின் பயிற்சிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 15 ஆலோசகர்கள் இந்த நிகழச்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர். சூரிய புகைப்படம் மைய



மின்னழுத்த முறைமை தொழில் நுட்ப (NVQ 4) பயிற்சியின் கீழ் 15 ஆலோசகர்களுக்கு கோட்பாடு மற்றும் செயன்முறை சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது. குறித்த அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்திப் பேட்டை சூரிய சக்தி புகைப்படம் மைய மின்னழுத்த முறைமை தொழில் நுட்பத் திறன் (NVQ 4) பயிற்சியின் கீழ் ஆலோசகர்களுக்கு மூன்று நாட்கள் கொண்டவொரு செயன்முறை பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

- சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு நைட்டா பயிலுநரை உருவாக்கும் நோக்கில் சீன பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன் போது சீனத் தொழில் சந்தைக்கும் மற்றும் இலங்கைத் தொழில் சந்தைக்கும் பொருத்தமான பாடநெறிகளைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டது.

நிறுவக சார் தகவல்கள்



பிரதான அலுவலகம்
971, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை
வெலிக்கடை, இராஜகிரிய
தொ.பே. 011-2888782-7

பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்
18ஆம் கட்டை, விகாரை வீதி
கட்டுநாயக்க
தொ.பே. 011-2252833

கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்
இல. 581, காலி வீதி, கட்டுப்பெத்தை
மொரட்டுவை
தொ.பே. 011-2647393, 011-2643847

மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம்
இல. 69ஏ, பேஸ்லைன் வீதி
ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டி
தொ.பே. 011-2572977

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்
அறிவியல் நகர், கிளிநொச்சி
தொ.பே. 021-4927799, 021-2060137

அம்பாறை மாவட்ட அலுவலகம்
இல. 06 ஜீ. எஸ். குறுக்கு வீதி
கல்முனைக்குடி 13, கல்முனை
தொ.பே. 067-2229357

அனுராதபுரம் மாவட்ட அலுவலகம்
விமான நிலைய மாவத்தை, அனுராதபுரம்
தொ.பே. 025-2223178

பதுளை மாவட்ட அலுவலகம்
இல. 4/10, மல்வத்தை வீதி, பதுளுபிட்டிய,
பதுளை தொ.பே. 055-2230644

மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம்
இல. 294, புதிய கல்முனை வீதி,
மட்டக்களப்பு
தொ.பே. 065-2228130

கொழும்பு மாவட்ட அலுவலகம்
இல. 242, ஹவ்லொக் நகர்
கொழும்பு 05
தொ.பே. 011-2587258, 011-2597671

காலி மாவட்ட அலுவலகம்
இல. 393, வக்வெல்ல வீதி, பூல்கஹ
காலி
தொ.பே. 091-2235628

கம்பஹா மாவட்ட அலுவலகம்
இல. 61/5, மினுவாங்கொடை வீதி
கம்பஹா
தொ.பே. 033-2232874

ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம்
இல. 39, பள்ளிக்குடா வீதி
தங்காலை
தொ.பே. 047-2241512

யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம்
இல. 44, சோமசுந்தரம் அவனியு
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021-2222383

களுத்துறை மாவட்ட அலுவலகம்
இல. 326/2, 3ஆம் தளம், பிரதான வீதி
காலி வீதி, களுத்துறை தெற்கு
தொ.பே. 034-2224239

கண்டி மாவட்ட அலுவலகம்
இல. 108/2/பி, திவங்க போதி மாவத்தை
கண்டி
தொ.பே. 081-2201918

கேகாலை மாவட்ட அலுவலகம்
பண்டாரநாயக்க மாவத்தை, பல்லபான
கலிகமுவ
தொ.பே. 035-2284931

கிளிநொச்சி மாவட்ட அலுவலகம்
கண்டி வீதி, ஆனந்தபுரம்
கிளிநொச்சி
தொ.பே. 034-3942824

குருநாகல் மாவட்ட அலுவலகம்
நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ
குருநாகல்
தொ.பே. 037-2223789

மாத்தறை மாவட்ட அலுவலகம்
இல. 27 ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி
நூபே, மாத்தறை
தொ.பே. 041-2226958

மன்னார் மாவட்ட அலுவலகம்
இல. 952/1, நல்லையார் வீதி, பழைய சோனகத்
தெரு மன்னார்
தொ.பே. 023-2223404

மாத்தளை மாவட்ட அலுவலகம்
இல. 11, விகாரை வீதி, மந்தண்டாவளை
மாத்தளை தொ.பே 066-2223173

மொனராகலை மாவட்ட அலுவலகம்
நீதிமன்ற வளாகம் மொனராகலை
தொ.பே 055-2223702

முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம்
மாங்குளம் வீதி, முள்ளியவளை
முல்லைத்தீவு
தொ.பே 021-2061012

நுவரெலியா மாவட்ட அலுவலகம்
இல. 116, கோவில் வீதி, ஹாவா எலிய
நுவரெலியா
தொ.பே 052-2223702

பொலன்னறுவை மாவட்ட அலுவலகம்
இல. 103, நீர்ப்பாசனப் பிரதேசம்
புதிய நகரம், பொலன்னறுவை
தொ.பே 027-3223023

புத்தளம் மாவட்ட அலுவலகம்
மோலவத்தை, மெதகம வீதி
மாதம்பை
தொ.பே 032-2248250

இரத்தினபுரி மாவட்ட அலுவலகம்
இல. 642, வித்தியாலய மாவத்தை, புதிய நகரம்
இரத்தினபுரி
தொ.பே 045-2228667

திருகோணமலை மாவட்ட அலுவலகம்
இல. 103/7, தபால் அலுவலக வீதி
திருகோணமலை
தொ.பே 026-2226569

வவுனியா மாவட்ட அலுவலகம்
ஓப் பார்க் வீதி
வவுனியா
தொ.பே 024-2224679

02. நிருவாக சபை

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர் கௌரவ தயாசிறி ஜயசேக்கர அவர்களால் கீழ்காணும் நபர்கள் முகாமைத்துவ சபைக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

டாக்டர் சாரங்க அழகப்பெரும
தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இலக்கம் 971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய

திரு டப்ளியூ.எம்.எஸ்.பீ. வாசல,
உப தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இலக்கம் 971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு,
இலக்கம் 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

திருமதி என்.எம்.எச்.சி. நவரத்ன,
இலக்கம் 248 டீ, அத்துருகிரிய வீதி,
மளபள்ள,
கொட்டாவ.

டாக்டர் இ.ஏ.எல்.சி.கே. எதிரிசிங்க,
இலக்கம் 169, பஹல இம்புல்கொட,
இம்புல்கொட.

திருமதி எம்.ஜி.என். பிரேமதிலக்க,
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்,
நிதி அமைச்சு,
கொழும்பு 01.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வட பிராந்திய அபிவிருத்தி, வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் கௌரவ ரனில் விக்ரமசிங்க அவர்களினால் தலைவர் (திரு நசீர் அஹமட்) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

திரு நசீர் அஹமட்
தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இலக்கம் 971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய

உப தலைவர் (திருமதி ஹிமாலி ஜினதாச) மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கைத்தொழில் மற்றும் வணிக விவகாரங்கள் அமைச்சர் கௌரவ ரிஷாட் பதியுதீன் அவர்களின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி.

திருமதி ஹிமாலி ஜினதாச,
இலக்கம் 83, ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல.

திரு சத்திர சரத்சந்திர,
இலக்கம் 191/1, அஸ்கிரி மாவத்தை,
அஸ்கிரி வல்பொல,
உடுகம்பொல.

மேற்குறித்த உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

பணிப்பாளர்கள் சபை அதிகாரிகள் பற்றிய விபரம்

1.	டாக்டர் சாரங்க அழகப்பெரும	- தலைவர் (01.01.2019 - 19.02.2019)
2.	பொறியியலாளர் நசீர் அஹமட்	- தலைவர் (20.02.2019 - 09.12.2019)
3.	திரு தரங்க நலீன் கம்லத்	- தலைவர் (27.12.2019 முதல் இன்று வரை)
4.	திருமதி ஹிமாலி ஜினதாச	- உப தலைவர் (03.06.2019 - 12.12.2019)
5.	ரீ.பி. முதிதா பத்மஜாயீ	- பதில் பணிப்பாளர் நாயகம் (03.09.2019 முதல் இன்று வரை) பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு)
6.	திரு பி.ஆர். ரொட்ரிகோ	- பணி அணவல் (ப.அ.) பணிப்பாளர் நாயகம் (18.04.2019 - 01.08.2019)
7.	திருமதி ஆர்.எம்.ஏ.பி. சமரதிவாக்கார	- பணிப்பாளர் (தர நியமம்)
8.	திரு சுமேத ஜயசிங்க	- பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் மனித வளங்கள்)
9.	செல்வி பீ.எல்.ஆர். பெரேரா	- பதில் பணிப்பாளர் (நிதி) (12.06.2019 - 22.09.2019)
10.	திருமதி என்.எஸ். நிஸ்ஸங்க	- பணிப்பாளர் (பயிற்சி) (09.06.2019 முதல் இன்று வரை)
11.	திரு ஜி.எச்.வி.என்.டப்ளியூ. த சில்வா	- பிரதிப் பணிப்பாளர் / பதில் பணிப்பாளர் (பயிற்சி) (01.07.2019 முதல் இன்று வரை)
12.	திரு ரீ.பி.கே. பெரேரா	- பிரதிப் பணிப்பாளர் (தர நியமம்)
13.	திரு சி.பி. சுபசிங்க	- உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
14.	திரு எம்.ஐ.எம். அசார்	- பணிப்பாளர் (நிதி) - கணக்காளர் (SLGTI)
15.	திரு எஸ்.வி.பி. விக்ரமசிங்க	- உதவிப் பணிப்பாளர் (மதிப்பீடு)
16.	திரு டப்ளியூ.ஏ.கே.எஸ். குமார	- உதவிப் பணிப்பாளர் (தொழில் வாய்ப்புப் பயிற்சி)
17.	திரு ஏ.ஜே. பத்திரன	- உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில் நுட்பம்)
18.	திரு எம்.எல்.பி. பெர்னாந்து	- உதவிப் பணிப்பாளர் (வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் மற்றும் சந்தைப்படுத்தல்)
19.	திரு ஜி.பி. சுனில்	- உதவிப் பணிப்பாளர் (தேசிய திறன்கள் நியமம்)
20.	திரு எம்.எச். சாஜஹான்	- உதவிப் பணிப்பாளர் (விஷேட தொழில் நுட்பப் பயிற்சி)
21.	திருமதி டப்ளியூ.ஏ.பி. அல்விஸ்	- உதவிப் பணிப்பாளர் (சான்றிதழ் வழங்கல்)

22. திரு ஆர்.டப்ளியூ.எம்.ஏ.ஜே. ரத்நாயக்க - உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள் முகாமைத்துவம்)

23. திருமதி யூ.எம். பிரபோஷினி - உதவிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)

24. திரு எஸ்.டீ.பி. உஸ்கொடஆராச்சி - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் வழங்கல்)

25. திரு ரீ.எஸ்.பி.ஏ. விக்ரமசிங்க - உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)

26. திருமதி பி.எம். விதானகே - உதவிப் பணிப்பாளர் (பயிற்சி சார்ந்த சேவை)

27. திரு ஏ.எச்.எஸ்.பி. விஜேரத்ன - உதவிப் பணிப்பாளர் (கண்காணிப்பு)

28. திரு எம்.எம்.பி. பெர்னாந்து - பயிற்சி முகாமையாளர் / உதவிப் பணிப்பாளர் (பராமரிப்பு மற்றும் சிவில்) பதில்

29. திருமதி என்.டப்ளியூ.என். சந்தமாலி - உள்ளகக் கணக்காய்வாளர்

30. திருமதி பி.எம். குமாரசிங்க - பணிப்பாளர் / அதிபர் - IETI


31. திரு டீ.ஆர். சபுதந்திரி - பணிப்பாளர் / அதிபர் - IET

32. திருமதி எச்.ஏ.என்.டீ. குமாரி - பணிப்பாளர் / அதிபர் - AETI

33. திரு ஏ.பீ. அல்பிரட் - பதிவாளர் - SLGTI

மாவட்ட முகாமையாளர்கள்

1. திரு எஸ்.டீ. அபேவிக்ரம	-	அம்பாந்தோட்டை
2. திரு ஏ. மன்சூர்	-	அம்பாறை
3. திருமதி டீ.டீ. பியலத்	-	கேகாலை
4. திரு எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன	-	கொழும்பு
5. திரு யூ.எம்.கே. நாணயக்கார	-	மாத்தறை
6. திரு பி.கே.பி. குணவர்த்தன	-	பதுளை
7. திரு பி. நாரன்கொட	-	காலி
8. திரு பீ.எம்.ஜே.எஸ்.கே. ரணராஜா	-	மாத்தளை
9. திரு எஸ். பவலநாதன்	-	வவுனியா
10. திரு எஸ்.ஏ.எம்.எஸ்.எம். சலீம் மவ்லானா	-	மட்டக்களப்பு
11. திரு எஸ். வீனஸ்	-	மன்னார்
12. திரு பீ.ஏ.யூ.ஏ. கருனாரத்ன	-	கண்டி
13. திரு ஜி.ரீ. ரட்னகுமார் (ப.அ.)	-	யாழ்ப்பாணம்
14. திரு ஜே. உதயவர்த்தன (ப.அ.)	-	புத்தளம்
15. திரு ஏ.ஜி.டீ. விஜேரத்ன (ப.அ.)	-	கம்பஹா
16. திருமதி எச்.எம்.டீ.ஏ.கே. விஜேரத்ன	-	களுத்துறை
17. திரு ரீ.எம்.ரீ.பீ. கருனாரத்ன (ப.அ.)	-	அனுராதபுரம்
18. திரு எஸ்.பி.சி.ஜே. மைத்திரிதாச (ப.அ.)	-	மொனராகல
19. திரு ஆர்.எம்.என்.எஸ்.கே. ரத்நாயக்க (ப.அ.)	-	குருனாகல்
20. திரு வை.எஸ். பியதிலக்க (ப.அ.)	-	இரத்தினபுரி
21. திரு யூ.ஜி.என். சமீர (ப.அ.)	-	பொலன்னறுவை
22. திருமதி எஸ். சிவகௌரி (ப.அ.)	-	முல்லைத்தீவு
23. திரு கே. பத்மநாதன் (ப.அ.)	-	திருகோணமலை
24. திரு வை. யோகேஸ்வரன் (ப.அ.)	-	கிளிநொச்சி
25. திரு டீ.ஏ.டீ. சூரியபண்டார (ப.அ.)	-	நுவரெலியா


National Apprentice & Industrial Training Authority
Organizational Structure
Chairman /CEO
Vice Chairman
Director General
Institutes /
Districts
Director Admin. & H.R.
Director Training
Director Quality
Director Planning & Monitoring
Director Finance
A.D. General Admin
A.D. Maint.& Constr.
A.D. HRM
A.D. HRD
A.D. Training Service
A.D. Training Admin
A.D. SIT
A.D. OJT
A.D. C.G.& Marketing
A.D. Quality
A.D. NSS
A.D. Assesment
A.D. Certificate
A.D. Information Systems
A.D. Planning
A.D. Monitoring
A.D. Acc. & Controll
Internal Auditor
I.A.O
M.A.
Office Aide
VRU Officer
Trp. Officer
M.A.
Drivers
Tech. Officer
Drft.M. M.A.
A.O.
M.A.
M.A.
T.O.
Inspec
Inspec.
Q.A. Off.
Sys. Adm
D.B Adm
Stat. cian
Acct. Officer
Proc. Officer
Acct. Officer
B/ Sec Leg.Off
Book Keeper
Management Asst.
Office Aide
Office Aide
Office Aide
Management Asst.
Management Asst.
Office Aide

இந்த அதிகார சபையின் குறிக்கோள்கள்

கூட்டிணைப்பு சட்டத்தினது 37 (1) ஆம் பந்தியின் பிரகாரம் அடைய வேண்டிய அதிகார சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.

(அ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிகளைத் திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தகைய பயிற்சிகளை வழங்கல்.

(ஆ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிக்குரிய பயிற்சி நியமங்களை நிர்ணயித்தல்.

(இ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிக்குரிய பரீட்சைகளை நடத்துதல், சான்றிதழ்களையும் மற்றும் ஏனைய விருது சான்றிதழ்களையும் வழங்கல்.

(ஈ) தேசிய தொழில் நுட்பத் திறன் பரீட்சையை நடத்துதல்.

(உ) வாழ்க்கைத்தொழில் பயிற்சி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கரும விடயங்களை மேற்கொள்ளல்.

(ஊ) பல திறன்களை, மேம்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு போட்டிகளை நடத்துதல்.

(எ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிகளை ஏற்பாடு செய்து வழங்கும் நிறுவகங்களினதும் ஏனைய நிறுவகங்களினதும் பயிற்சி ஆற்றல்களை மேலும் விருத்தி செய்தல்.

(ஏ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக வாழ்க்கைத்தொழில் பயிற்சி ஆணைக்குழுவுக்கு அறிவுரைகளை வழங்குதல்.

(ஒ) ஒரே குறிக்கோளுடைய இலங்கையிலும் வெளிநாடுகளிலும் காணப்படுகின்ற நிறுவகங்களுடன் தொடர்புகளுடைய சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு ஆகியவற்றிலுள்ள சமத்துவத்தை கருத்திக் கொள்ளும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.

இந்த அதிகார சபையின் முக்கிய கரும பணிகள் / நிகழ்ச்சித் திட்டங்கள்

(அ) அரச நிறுவகங்களுடனும் தனியார் துறை நிறுவகங்களுடனும் ஒன்றிணைந்து கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சிகளை வழங்கல், 04 பயிற்சி நிறுவகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பயிலுநர் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் இரட்டைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(ஆ) ஏனைய தொழில் பயிற்சிகளைப் பெறுகின்ற நபர்களை பல நிறுவகங்களுக்கு அனுப்பி தொழில் வாய்ப்புப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(இ) மொரட்டுவ பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம் மற்றும் ரூஹுணு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கும் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளைப் பின்பற்றும் ஏனைய மாணவர்களுக்கும் தேவையான எந்திரப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(ஈ) முறை சாராத விதத்தில் திறன்களைப் பெற்ற தொழில் நுட்பவியலாளர்களுக்கு முன்னைய மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய தேசிய தொழில் தகைமை பற்றிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழிலுக்குரிய தகைமை சார்ந்த சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுத்தல் அதே போல் தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சைகளை நடத்துதல்.

(உ) வாழ்க்கைத்தொழில் நிறுவகங்களின் பயிலுநர்களுக்கு பயிற்சி அளித்தல்.

(ஊ) பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்களுக்கும் மற்றும் ஏனைய இலக்குக் குழுக்களுக்கும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சார் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

பயிற்சி முறையியலும் மற்றும் ஏனைய முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களும்

பயிற்சி முறையியலை பிரதானமாக கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி, நிறுவக சார் பயிற்சி / கேந்திர மைய இரட்டைப் பயிற்சி, எந்திரப் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புப் பயிற்சி என வகைப்படுத்தலாம்.

- **கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி**

இந்த அதிகார சபையின் மூலம் நடத்தப்படும் பயிற்சி செயற்பாடுகளுக்கு மத்தியில் இந்தப் பயிற்சி பிரதான பயிற்சி முறையியலாக விளங்குகின்றது. கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சியை வழங்குவதற்கு இலங்கையில் காணப்படும் ஒரேயொரு அரச நிறுவகம் இந்தத் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையாகும். இந்தப் பயிற்சி முறையியலின் கீழ் பயிற்சி பெறுகின்ற பயிலுநர்கள் அவர்களின் பயிற்சி காலப் பகுதியில் வேலைகளைச் செய்து கற்றுக் கொள்வதன் மூலம் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அந்தப் பயிலுநர்கள் அந்தக் கைத்தொழிலுக்காக இணைக்கப்படுகின்றனர்.

இங்கு பயிலுநர் ஒருவருக்கு கீழ்காணும் பயிற்சி முறையியல்களில் ஒரு பயிற்சி முறையியலின் கீழ் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

i. கைத்தொழில் நுட்பப் பயிலுநர் பயிற்சி

ii. தேசிய வாழ்க்கைத்தொழில் கல்வி சான்றிதழ் பயிற்சி

iii. தாபனப் பயிலுநர் பயிற்சி

iv. கிராமிய பயிலுநர் பயிற்சி

- **கைத்தொழில் நுட்பப் பயிலுநர் பயிற்சி**

ஒவ்வொரு பிரிவுக்குமான விஷேட தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் சார்ந்த ஆலோசனைக் குழுவின் (NITAC) மூலம் ஒவ்வொரு பிரிவுக்குமான பயிற்சி நியம தரம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தப் பயிற்சி தர நியமங்களுக்கு இணங்க பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் கைத்தொழில் உரிமையாளர்களுக்கும் பயிலுநர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு நிறுவகத்திலும் பயிலுநர் பயிற்சிகளை ஆரம்பிக்க முடியும்.

- **தேசிய தொழில் தகைமை சான்றிதழ் பயிற்சி (NVQ)**

இந்தப் பயிற்சி பயிலுநர் பயிற்சியின் கீழ் 51 தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தப் பயிற்சி முறையியலினது கைத்தொழில் நுட்ப பயிலுநர் முறையியலின் கீழ் கைத்தொழில் உரிமையாளர்களுக்கும் மற்றும் பயிலுநர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு பயிற்சி நிறுவகத்திலும் பயிற்சிகளை ஆரம்பிக்க முடியும். இந்த முறையியலினுள் பயிற்சி நிறுவகத்தின் / கைத்தொழில் மூன்றாம்நிலை வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். பயிலுநர்களும் எப்பொழுதும் மதிப்பீட்டிற்கு உட்படுதலும் வேண்டும். பயிற்சி முடிவில் மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி ஆணைக்குழுவில் பதிவு பெற்றுள்ள மதிப்பீட்டுத் தரப்புகளினால் இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை நடத்தப்பட்டு அந்தந்த மட்டத்திற்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தாபனப் பயிலுநர் பயிற்சி

இந்தப் பயிற்சி முறையியலின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பிரத்தியேக கைத்தொழிலில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பயிலுநர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். உரிய பயிற்சி தர நியமங்கள் அந்தந்த உரிய நிறுவகங்களும் மற்றும் இந்த அதிகார சபையும் இணைந்து தயாரிக்கப்படுகின்றன.




- **கிராமிய மட்டப் பயிலுநர் பயிற்சி**

கைத்தொழில் நுட்ப மட்டத்திலான தொழிலாளர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சியை குறித்த தர நியமங்களுக்கு இணங்க பெற்றுக் கொள்வதற்கு முடியாத பயிலுநர்களுக்கு கிராமிய பயிற்சி வசதிகளைப் பயன்படுத்தி கிராமிய மட்டப் பயிலுநர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதை இலக்காகக் கொண்டு கிராமிய பயிலுநர்களுக்கான பயிற்சி முறையியல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் தேவையான தர நியமங்கள் உரிய நிறுவகங்களுடன் கலந்துரையாடி இந்த அதிகார சபையினால் தயாரிக்கப்படுகின்றது.

கைத்தொழில் மைய கைத்தொழில் நுட்பப் பயிலுநர்களுக்கும் மற்றும் தேசிய தொழில் பயிற்சித் தகைமை சான்றிதழ் பெறுகின்றவர்களுக்கும் உரிய கோட்பாடு சார்ந்த அறிவு பயிற்சி மற்றும் தொலைக் கல்வி ஆகியவற்றின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

மேலும் பயிலுநர்களுக்கு தேவையான அடிப்படை கோட்பாடு மற்றும் செயன்முறை சார் அறிவு குறிப்பிட்டவொரு காலப் பகுதியில் உரிய பயிற்சி நிலையத்தினாலேயே பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு தமது பாடங்களை சுயமாகக் கற்றுக் கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுத்து அச்சீட்டு அஞ்சல் ஊடான பாடநெறி மாதிரிகளும் இந்த அதிகார சபையின் மூலமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. பாடநெறி முடிவில் வழங்கப்படுகின்ற வினாக்களுக்கு பயிலுநர்கள் விடைகளை எழுதி அனுப்பிய பின்னர் உரிய முறையில் சரிபார்க்கப்பட்டு மீண்டும் அவர்களுக்கு அவை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

அச்சீட்டு அஞ்சல் ஊடான பாடநெறியைப் பின்பற்றும் போது பயிலுநர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் என்பவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும் முகமாக காலத்திற்கேற்ற வார இறுதி வகுப்புகள் இந்த அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன.

இது தவிர, தொழிலுக்குரிய ஆங்கில அறிவை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆங்கிலப் பாடநெறியும் இந்த அதிகார சபையால் பெற்றுக் கொடுக்கப் படுகின்றது.

தாபனப் பயிற்சி / கேந்திர மைய இரட்டைப் பயிற்சி



இந்தப் பயிற்சி முறையியலின் கீழ் பயிலுநர்கள் நேரடியாக தேசிய பயிற்சி நிறுவகத்திற்கு அல்லது பிராந்திய பயிற்சி நிறுவகத்திற்கு உரிய காலப் பகுதியினுள் இணைக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அதன் பின்னர் அரச நிறுவகங்களில் அல்லது தனியார் துறை நிறுவகங்களில் தொழில் வாய்ப்புப் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். பயிற்சி நிறுவகத்தினால் அல்லது பயிற்சி நிலையத்தினால் உரிய பொருத்தமான கோட்பாடு மற்றும் செயன்முறை சார்ந்த அறிவு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் இந்த அதிகார சபையின் கீழ் இயங்கும் நான்கு (04) தேசிய பயிற்சி நிறுவகங்களுக்கு மேலதிகமாக நாட்டின் பல பாகங்களிலும் 74 பயிற்சி நிலையங்கள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நடத்தப்படும் பாடநெறிகளின் காலம் 06 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரை வித்தியாசப்படும்.

- **எந்திரப் பயிற்சி**

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி பற்றிய சட்டத்தின் 38 (இ) பிரிவுக்கு இணங்க மொரட்டுவ பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம் மற்றும் ரூஹுணு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரி மாணவர்களினது பொறியியல் பட்டத்திற்காகவும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்கள் ஆகியவற்றின் மூலம் நடத்தப் படும் டிப்ளோமா பாடநெறிகளுக்கும் உரிய எந்திரப் பயிற்சி இந்த அதிகார சபையின் மூலம் வழங்கப்படுகின்றது.

- **தொழில் வாய்ப்புப் பயிற்சி**





ஏனைய தொழில் பயிற்சி நிறுவகங்களில் நிறுவக சார் பயிற்சிகளை நிறைவு செய்யும் நபர்களுக்கு ஆறு மாத கால தொழில் வாய்ப்புப் பயிற்சி இந்த அதிகார சபையின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக தொழில் நுட்பக் கல்லூரிகள், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் மன்றம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்டுள்ள அரச துறை நிறுவகங்களில் / தனியார் துறை நிறுவகங்களில் வாழ்க்கைத்தொழில் பிரிவில் பயிற்சிகளைப் பெற்ற நபர்களுக்கு தொழில் நுட்பப் பிரிவில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கும் முகமாக இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் நுட்பப் பயிலுநர் மற்றும் தேசிய பயிலுநர் சான்றிதழ் முறையியலின் கீழ் பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களுக்க இறுதி வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை

இந்த அதிகார சபையினது தலைமை அலுவலகத்தின் பரீட்சை மதிப்பீட்டுப் பிரிவின் மூலம் நடத்தப்படுகின்றது. எனினும் வலய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதையடுத்து இந்த விடயத்தை பன்முகப்படுத்த எதிர்பார்ப்பதால் தற்பொழுது மூன்றாவது வலயத்தின் கீழ் வருகின்ற கொழும்பு மாவட்டம், கம்பஹா மாவட்டம் மற்றும் இரத்தினபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் அந்தந்த வலய அலுவலகங்களின் மூலம் இறுதி வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை நடத்தப் படுகின்றது.

இது தவிர தேசிய தொழில் தகைமைப் பரீட்சை (NVQ) மற்றும் தேசிய தொழில் பரீட்சை (NTT) ஆகிய பரீட்சைகள் பற்றிய மதிப்பீடுகளும் தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.



தாபன மற்றும் கிராமிய மட்டப் பயிலுநர்களுக்குரிய இறுதி வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை அந்தந்த மாவட்ட அலுவலகங்களின் மூலம் நடத்தப்படுகின்றது.

தேசிய நிறுவகங்களில், சான்றிதழ் பத்திரங்கள் அனைத்தும் அதிபருடன் அல்லது பதிவாளருடன் இணைந்து, அதிகார சபையின் தலைவரினது கையொப்பத்துடன் அந்தந்த நிறுவகங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

- **தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை மற்றும் தேசிய தொழில் தகைமை**

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வாழ்க்கைத்தொழில் பரீட்சைகள் நடத்தப்பட்டு உரிய திறன்களையுடைய தொழில் நுட்பவியலாளர்களுக்கு திறமை சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. முறை சாராத பயிற்சியைப் பெற்று தற்பொழுது பணிபுரிகின்ற திறன் தொழில் நுட்பவியலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள வாழ்க்கைத்தொழில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மிகவும் சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களை பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் இந்தப் பயிற்சி முறையியல் அதிகம் பயன்படுகின்றது.

தற்பொழுதுள்ள வாழ்க்கைத்தொழில் பரீட்சை தரம் III, தரம் II மற்றும் தரம் அரைத் திறன், திறன், விஷேட திறன் என 3 மட்டங்களில் நடத்தப்படுகின்றது.

தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை முறையியல் தேசிய திறன்கள் தர நியமமற்ற 10 தொழில்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் மற்றும் இலங்கை கணனித் திறன் சான்றிதழ்களை வழங்குவதற்கும் செயற்படுத்தப்படுகின்றது.

தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி முறையியல் தற்பொழுது தேசிய தொழில் தகைமை சான்றிதழ் முறையியலின் கீழ் (NVQ) காணப்படுகின்ற முன் கற்கை பின் மதிப்பீடாக (RPL) பரிணமித்து வருகின்றது.

ஆதலால் முறை சாராத பயிற்சியைப் பெற்று தற்பொழுது பணிபுரிகின்ற திறன் தொழில் நுட்பவியலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மிகவும் சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.

இந்தத் தொழில் பிரவேசத்திற்கு பயிலுநர்களிடத்தில் அதிக கேள்வி நிலவுகின்றது. மேலும், இதில் தொழில் மட்டம் VII வரை தரப்படுத்தப்பட்டுள்ளதால் பயிலுநர்களுக்கு தாம் நிறைவு செய்த மட்டத்திலிருந்து மீண்டும் அடுத்த மட்டத்தை தொடரக் கூடியதாக உள்ளமை

ஒரு விஷேட வாய்ப்பாகும். மேலும் ஏதாவதொரு மட்டத்தில் நிறுத்திய பின்னர் மீண்டும் தொடர்வதாகவிருந்தால் ஏனைய பயிற்சி நிலயத்தின் ஊடாக அதனை நிறைவு செய்ய முடியுமாகவிருப்பதும் இங்கு பயிற்சிகளை பெறுகின்ற பயிலுநர்களுக்கு விஷேட வாய்ப்பு வசதியாகும். பட்டப்படிப்பு மட்டம் வரை கல்வி செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ள வாய்ப்பானது பயிலுநர்களுக்கு கிடைக்கக் கூடிய ஒரு விஷேட நன்மையாகும்.

- **தேசிய திறன் தர நியமங்களைத் தயாரித்தல்**

இது இந்த அதிகார சபை மூலம் வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பிரிவுக்கு என நிறைவேற்றப்படும் ஒரு முக்கிய கரும பணியாகும். தேசிய திறன் தர நியமங்களைத் தயாரிக்கும் சட்டமுறையான அதிகாரம் குறித்த சட்டத்தின் மூலம் இந்த அதிகார சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவின் மூலம் இனங்காணப்படும் தொழில்களுக்குரிய தேசிய திறன் தர நியமங்களைத் தயாரித்தல் மற்றும் செல்லுபடியாக்கல் ஆகிய கருமங்கள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய கைத்தொழில் பயிற்சி ஆலோசனைக் குழுவொன்றின் மூலம் தயாரிக்கப்படும் தேசிய திறன் தர நியமங்கள் ஒவ்வொரு தொழிலுக்குமுரிய தர நியம தயாரிப்புக் குழு ஒன்றினால் தயாரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுகின்றன.

தேசிய கைத்தொழில் பயிற்சி ஆலோசனைக் குழு ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றும் தொழிலுக்குமான விஷேட நபர்கள் அடங்கிய ஒரு குழுவாகும். ஏற்கெனவே சுமார் 28 ஆலோசனைக் குழுக்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு குழுவிலும் சுமார் 16 உறுப்பினர்கள் அடங்குகின்றனர்.

- **தொழில்முயற்சித் திறன்கள் அபிவிருத்தி**

பயிற்சியில் ஈடுபடுகின்ற மற்றும் பயிசியை நிறைவு செய்த ஆகிய இரண்டு பிரிவினருக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்படுகின்றது. பயிற்சியை நிறைவு செய்த பின்னர் சுய தொழில்களை ஆரம்பிக்கத் தேவையான அறிவையும் திறனையும் பெற்றுக் கொடுப்பது இதன் பிரதான குறிக்கோளாகும்.

- **தொழில் வழிகாட்டல்**

பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்களினதும் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களினதும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி பற்றிய மற்றும் குறிப்பாக தொழில் சந்தை பற்றிய அறிவை விருத்தி செய்து கொள்ளும் முகமாக இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

- **ஊழியர் அபிவிருத்தி மற்றும் ஆளுமை விருத்தி**

இந்த நைட்டா நிறுவனத்தின் ஊழியர்களது திறன்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பல கட்டங்களாக செயற்படுத்தப்படுகின்றன. ஊழியர்களின் தொழில் கடமைகளுக்கு ஈடையூறுகள் ஏற்படாத வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.



தரவுகள் பிரதிபலிப்பும் பகுப்பாய்வும்

அட்டவணை 01 - பயிற்சிகள் பற்றிய சுருக்கமான விபரம் (பல பயிற்சி வகுதிகளின் கீழ்)

2019		பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல்		பயிற்சியிலிருந்து விலகுதல்		பயிற்சியை நிறைவு செய்தல்		பயிலும் பயலுநர்களின் எண்ணிக்கை	
		2018	2019	2018	2019	2018	2019	2018	2019
கேந்திர மைய பயிலுநர் பயிற்சி	மாவட்டப் பயிற்சி நிலையம் - முழுநேர ஏனைய பயிற்சி	1,511	851	461	261	1,185	1,027	1,072	635
	மாவட்டப் பயிற்சி நிலையம் - முழுநேரப் பயிற்சி - தேசிய தொழில் தகைமை (NVQ)	4,128	3,745	774	738	3,390	3,397	3,540	3,150
	மாவட்டப் பயிற்சி நிலையம் - பகுதிநேரப் பயிற்சி	799	697	14	-	918	918	440	219
தேசிய நிறுவகம்	முழுநேரப் பயிற்சி	1,688	1,337	231	764	1,095	1,029	3,750	3,294
	பகுதிநேரப் பயிற்சி	769	995	31	610	641	905	600	80
கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி	தொழில் நுட்பவியலாளர் பயிற்சி	4,617	3,664	3,377	1,609	2,976	3,143	6,752	5,664
	தேசிய தொழில் தகைமைப் பயிற்சி (NVQ)	17,886	18,031	3,706	5,090	10,582	13,773	11,572	10,740
	தாபனப் பயிற்சி	1,362	1,172	616	212	1,583	1,027	867	800
	கிராமிய மட்டப் பயிற்சி	418	491	104	99	622	291	261	362
உப மொத்தம்		**33,178**	**30,983**	**9,314**	**9,383**	**22,992**	**25,510**	**28,854**	**24,944**
ஏனைய	விஷேட கைத்தொழில் பயிற்சி	8,994	11,365	245	-	7,119	9,592	6,049	7,822
	தொழில் வாய்ப்புப் பயிற்சி	8,749	12,872	982	1,253	7,807	12,621	3,410	2,408
மொத்தம்		**50,921**	**55,220**	**10,541**	**10,636**	**37,918**	**47,723**	**38,313**	**35,174**

*** பயிற்சியை நிறைவு செய்தலிலும் மற்றும் பயிற்சியிலிருந்து விலகலிலும் முன்னைய ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர்களும் அடங்குகின்றனர்.

2019 ஆம் ஆண்டை ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது இந்த ஆண்டில் 55,220 பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 8% வீதமான அதிகரிப்பைக் காட்டுகின்றது (அட்டவணை 01). கேந்திர மையப் பயிலுநர் பயிற்சிக்கு இணையாக கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சிக்கு அதிகளவு ஆர்வம் காணப்படுவது இந்த ஆண்டிலும் கூட அவதானிக்கக் கூடிய ஒரு சிறப்பம்சமாகும். வாழ்க்கைத்தொழில் பிரிவினுள் கைத்தொழில் மையப் பயிலுநர் பயிற்சியை நடத்தும் ஒரேயொரு நிறுவனம் எமது அதிகார சபை என்பது இதற்கான காரணமாகும்.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தேசிய தொழில் தகைமைக்கான (NVQ) மட்டப் பயிலுநர்களின் எண்ணிக்கையில் சற்று அதிகரிப்பு காணப்படுகின்றது. அது 0.8% வீதமான ஒரு அதிகரிப்பாகும். எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, அது குறைந்துள்ளது.


முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விஷேட கைத்தொழில் பயிற்சிக்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளலில் 26% வீதமான ஒரு அதிகரிப்பும், தொழில் வாய்ப்புப் பயிற்சிக்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளலில் 47% வீதமான ஒரு அதிகரிப்பும் அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பயிற்சியை விட்டுவிலகுவதில் காணப்படும் வித்தியாசம் 69 ஆகும் (விஷேட கைத்தொழில் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புப் பயிற்சி தவிர) இது 0.7% வீதமாகும். விஷேட கைத்தொழில் பயிற்சி உள்ளடங்கலாக இது 0.9மூ வீதமாகும்.

கேந்திர மையப் பயிற்சியிலிருந்து விலகும் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்துள்ளது. இது புள்ளிவிபர ரீதியில் 250 ஆகும். இது 20% வீதமான ஒரு வீழ்ச்சியாகும்.

தேசிய நிலையங்களில் பயிற்சியிலிருந்து விலகும் எண்ணிக்கை 1112 ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்துள்ளது.


வரைபு 01 - பயிற்சிகள் பற்றிய சுருக்கமான விபரம் (15 வருடங்களினுள்)



15 முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல், பயிலுநர்கள் பயிற்சியிலிருந்து விலகல் மற்றும் பயிலுநர்கள் பயிற்சியை நிறைவு செய்தல் முதலிய விபரங்களை இந்த வரைபு சுட்டிக் காட்டுகின்றது (வரைபு 01).

பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதில் சாதகமான ஒரு போக்கு காணப்படுகின்றது. இந்த ஆண்டில் அது முன்னைய ஆண்டை விடவும் ஒரு அதிகரிப்பைக் காட்டுகின்றது. பயிலுநர்கள் பயிற்சியிலிருந்து விலகும் போக்கு வழமை போல் காணப்படுகின்றது. பயிற்சியை நிறைவு செய்வதிலும் ஒரு சாதகமான போக்கு காணப்படுகின்றது. மொத்தப் பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளலிலும் ஒரு சாதகமான போக்கு காணப்படுகின்றது.

வரைபு 02 - பல பயிற்சி வகுதிகளின் கீழ் பயிற்சிக்கு பயிலுநர்களை இணைத்துக் கொள்ளல்



குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் பல பயிற்சி வகுதிகளின் கீழ் பயிலுநர்கள் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டமை பற்றிய விபரங்களை வரைபு 02 சுட்டிக் காட்டுகின்றது. இது கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சிக்கு பயிலுநர்களின் அதிக ஆர்வத்தை சுட்டிக் காட்டுகின்றது.

அதே போல் விஷேட கைத்தொழில் நுட்பவியலாளர் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புப் பயிற்சி ஆகிய பயிற்சிகளுக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதிலும் கணிசமான ஒரு அதிகரிப்பையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

விஷேட கைத்தொழில் பயிற்சிக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளலிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அட்டவணை 02 - பல வகுதிப் பயிற்சிகள் பற்றிய சுருக்கமான விபரம் (பால்நிலை ரீதியாக)

2019			பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல்			பயிற்சியிலிருந்து விலகுதல்			பயிற்சியை நிறைவு செய்தல்			பயிலும் பயலுநர்களின் எண்ணிக்கை		
			ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கேந்திர மைய பயிலுநர் பயிற்சி	மாவட்டப் பயிற்சி நிலையம் - முழுநேர பயிற்சி	தேசிய தொழில் தகைமை	263	588	851	54	207	261	394	633	1,027	122	513	635
		தேசிய தொழில் தகைமை (NVQ)	1,327	2,418	3,745	187	551	738	1,359	2,038	3,397	989	2,161	3,150
	மாவட்டப் பயிற்சி நிலையம் - பகுதிநேர பயிற்சி		189	508	697	-	-	-	234	684	918	56	163	219
தேசிய நிறுவகம்	பகுதிநேர பயிற்சி		1,119	218	1,337	624	140	764	847	182	1,029	2,796	498	3,294
	பகுதிநேர பயிற்சி		979	16	995	565	45	610	891	14	905	80	-	80
கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி	கைத்தொழில் நுட்ப பயிற்சி		2,196	1,468	3,664	1,144	465	1,609	1,879	1,264	3,143	4,218	1,446	5,664
	தேசிய தொழில் தகைமை (NVQ)		13,263	4,768	18,031	3,423	1,667	5,090	10,248	3,525	13,773	6,637	4,103	10,740
	தாபனப் பயிற்சி		764	408	1,172	112	100	212	666	361	1,027	525	275	800
	கிராமிய மட்டப் பயிற்சி		95	396	491	14	85	99	106	185	291	79	283	362
உப மொத்தம்			20,195	10,788	30,983	6,123	3,260	9,383	16,624	8,886	25,510	15,502	9,442	24,944
மொத்தம்	விஷேட கைத்தொழில் பயிற்சி		6,816	4,549	11,365	-	-	-	5,915	3,677	9,592	4,546	3,276	7,822
	தொழில் வாய்ப்புப் பயிற்சி		5,623	7,249	12,872	576	677	1,253	5,300	7,321	12,621	837	1,571	2,408
மொத்தம்			32,634	22,586	55,220	6,699	3,937	10,636	27,839	19,884	47,723	20,885	14,289	35,174

*** பயிற்சியை நிறைவு செய்தலிலும் மற்றும் பயிற்சியிலிருந்து விலகலிலும் முன்னைய ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர்களும் அடங்குகின்றனர்.


பயிலுநர்களுக்கான வருடாந்த சுற்றுப் பிரயாணம் ஏற்பாடு செய்யப்பட்டமை

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஒரு மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டமை



பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த பயிலுநர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் வைபவம் நடத்தப்பட்டமை





ஒரு சர்வராத்திரி பிரித் உபதேசமும் மறுநாள் அதிகாலை மகா சங்கருவனத்தை முன்னிட்டு ஒரு புன்னிய பூஜையும் நடத்தப்பட்டமை

கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்



நவீன தொழில் நுட்பத்தின் கீழ் CCTV கெமராவை பொருத்துவது பற்றிய ஒரு அறிமுக நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டமை



பிடிலைட்டு லங்கா (தனியார்) தனியார் நிறுவனத்துடன் இணைந்து Water Proofing தொழில் நுட்பம் பற்றிய ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டமை



நைட்டா விளையாட்டு விழா நடத்தப்பட்டமை



ஒரு கரப்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டமை



மதுபானம் அருந்துதல், மனோபாவம், வாகனப் போக்குவரத்து ஒழுங்குவிதி என்பன பற்றி விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டமை



சீனப் பிரதிநிதிகள் குழு வருகை தந்தமை





நைட்டா தினத்தை முன்னிட்டு தேவைகள் காணப்படும் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் மரம் நடுதல் நிகழ்வு நடத்தப்பட்டமை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
31 டிசம்பர் 2019 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று

சொத்துகள்	குறிப்பு	2019 (ரூ.)		2018 (ரூ.) மீளக்குறிப்பிட்டது 2018		
நடைமுறை அல்லாத சொத்துகள்						
உடமை, இயந்திரங்கள், உபகரணங்கள்	2	2,841,060,680.62		3,010,263,854.47	1,146,799,488.30	
செயற்படு நிலை மூலதனம்	3	48,775,006.97	2,889,835,687.59	119,219,554.62	119,219,554.62	1,266,019,042.92
நடைமுறைச் சொத்துகள்						
இருப்புகள்	4	15,090,936.78		13,328,148.78	13,328,148.78	
வருமதிகள்	5	107,900,622.40		112,096,415.14	112,096,415.14	
வைப்புகள், முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்கள்	6	28,702,899.51		41,615,714.32	41,615,714.32	
குறுகிய கால முதலீடுகள்	7	72,444,808.51		76,622,153.57	76,622,153.57	
இடைவழியிலுள்ள காசு	8	10,068,238.84		1,233,548.73	1,233,548.73	
காசு மற்றும் காசுக்கு சமமானவை	9	108,619,212.07	342,826,718.11	67,437,644.69	67,437,644.69	312,333,625.23
மொத்த சொத்துகள்			**3,232,662,405.70**	**3,441,817,034.32**		**1,578,352,668.15**
மூலதனமும் பொறுப்புகளும்						
திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை)	11	992,148,711.14		747,658,064.33	(832,388,817.12)	
திரட்டப்பட்ட மிகை பகுதி நேரம்	11a	36,228,874.50		39,693,917.31	39,693,917.31	
ஒதுக்கம்	11b	428,930,480.06		1,021,219,551.07	741,584,069.35	
அரச நன்கொடைகள் (மூலதனம்)	11c	11,213,031.84		71,249,441.66	71,249,441.66	
அரச நன்கொடைகள்- SSDP	11d	67,389,151.99		45,645,417.94	45,645,417.94	
வித்தியாசப்படும் வருமானம்	13	1,192,289,150.58	2,728,199,400.11	1,141,710,286.15	1,141,710,286.15	1,207,494,315.29
நடைமுறை அல்லாத பொறுப்புகள்						
பணிக்கொடைக்கான ஏற்பாடு	12	239,339,472.00	239,339,472.00	175,094,677.00	175,094,677.00	175,094,677.00
நடைமுறைப் பொறுப்புகள்						
சென்மதிகள்	10	265,123,533.59	265,123,533.59	199,545,678.86	195,763,675.86	195,763,675.86
மொத்த மூலதனமும் பொறுப்புகளும்			**3,232,662,405.70**	**3,441,817,034.32**		**1,578,352,668.15**

குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கம் 8 இலிருந்து 19 வரையுள்ள குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்.

சான்றுப்படுத்தல்

மேலுள்ள நிதிக்கூற்றுகள் 31 டிசம்பர் 2019 இலுள்ள விடயங்களினதும் 31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான மிகை / (பற்றாக்குறை) களின் உண்மையான மற்றும் நியாயமான தோற்றத்தை வழங்குகின்றன என்பதையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

.....
K A D தாமரா ரம்யலதா
கணக்கீட்டு உத்தியோகத்தர்

.....
N W நயோமி சந்தமாலி
பணிப்பாளர் (நிதி) Att.D

.....
T P M பத்மஜெய்
பணிப்பாணர் நாயகம் (பதில்)

.....
தரங்க நளீன் கம்லத்
தலைவர் / (CEO)

இந்த நிதிக்கூற்றுகளின் தயாரிப்புக்கும் முன்வைப்புக்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவர்கள் சார்பில் ஒப்பமிடப்பட்டது.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று

விபரம்	குறிப்பு	2019 (ரூ.)	2018 (ரூ.)
செயற்பாட்டு வருமானம்			
அரச நன்கொடைகள் - தொடர்ச்சியான		1,161,995,000.00	1,175,060,000.00
அரச நன்கொடைகள் - மறுசீரமைப்பு		5,291,729.69	15,508,938.42
சுயமாக உருவாக்கப்பட்ட வருமானம்	11a	-	(31,681,454.63)
வித்தியாசப்படும் வருமானம் மாற்றப்பட்டது	13	122,748,469.41	101,120,861.86
ஏனைய வருமானம்			
திறன் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		50,070,021.11	89,220,153.36
ஏனைய உதவிகள்	14	12,485,425.04	36,292,796.69
அவுஸ்திரலிய செயற்றிட்டம்			4,624,950.00
CEB NAITA இணைந்த செயற்றிட்டம்			8,970,277.00
ஏனைய வருமானம்	15	114,540,315.92	61,828,449.06
மொத்த வருமானம்		**1,467,130,961.17**	**1,460,944,971.76**
செயற்பாட்டு செலவுகள்			
பயிற்சி திரவியங்கள்	16	7,480,896.83	22,204,257.82
ஏனைய பயிற்சி செலவுகள்	17	208,982,251.27	218,985,857.71
ஊழியர் செலவுகள் - தனிப்பட்ட ஊதியம்	18	823,626,446.38	717,152,571.58
ஊழியர் செலவுகள் - ஏனையவை	19	70,098,938.73	21,395,464.01
போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்	20	70,200,947.54	87,903,661.26
வழங்கல்கள் மற்றும் அலுவலக தவைகள்	21	22,783,627.31	45,364,037.79
உபகரண பராமரிப்பு	22	11,621,683.75	11,290,870.25
வளாகப் பராமரிப்பு	23	184,462,000.01	181,343,941.59
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	24	11,843,860.38	4,514,455.19
தேய்மானம்	25	241,520,451.13	133,318,578.63
கணக்காய்வு கட்டணம்		1,680,866.19	584,004.61
மொத்த செயற்பாட்டு செலவுகள்		**1,654,301,969.52**	**1,444,057,700.44**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய மிகை/(பற்றாக்குறை)		**(187,171,008.35)**	**16,887,271.32**
திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை) கூற்றுகள்			
NAITA நிதியம்			
ஜனவரி 1 இல் ஏலவே அறிக்கையிடப்பட்டபடி		(832,388,817.12)	(870,562,966.04)
தானாக பிறப்பிக்கப்பட்ட திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை) இசைவாக்கம்		15,950,771.24	(240,823.10)
முன்னைய வருட சீராக்கல்			(16,785,577.22)
இந்த வருடத்தின்போது முன்னைய வருட சீராக்கல்		1,995,757,765.37	6,344,494.30
முன்னைய வருட சீராக்கல் NAITA நிதியம் ஆரம்ப மீதி பற்றாக்குறை	0		287,328.99
பகுதி நேரம்			
ஜனவரி 1 இல் ஏலவே அறிக்கையிடப்பட்டபடி பகுதி நேரம்		39,693,917.31	71,582,600.30
முன்னைய வருட சீராக்கல்		252,991.52	45,763.16
வருடத்திற்கான சீராக்கல்		874,744.50	(252,991.52)
ஜனவரி 1 இல் மீளக்குறிப்பிட்டபடி		1,220,141,372.82	(809,582,171.13)
காலத்திற்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)		(187,171,008.35)	16,887,271.32
டிசம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய மிகை/(பற்றாக்குறை)		**1,032,970,364.47**	**(792,694,899.81)**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

தொகுக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

விபரம்	குறிப்பு	2019 (ரூ)		2018 (ரூ.)	
செயற்பாட்டு நடவடிக்கைகள்					
காலத்திற்கான மிகை/(பற்றாக்குறை)			(187,171,008.35)		16,887,271.29
சீராக்கல்கள்					
தேய்மானம்		241,520,451.13		133,589,815.05	
வித்தியாசப்படும் வருமானம்		(122,748,469.41)		(101,120,861.86)	
சொத்துகளை அகற்றியதில் நட்டம்		7,082.15		219.89	
சொத்துகளை அகற்றியதில் இலாபம்		(56,071.72)			
அறவிட முடியாக் கடன்கள் AETI PU/PTC, ATI PU/PTC				16,069.82	
முன்னைய வருட சீராக்கல் NAITA கணக்கு இலாபம்	26	8,193,197.47		(1,201,220.99)	
முன்னைய வருட சீராக்கல பகுதிநேரம் ATI & HO	27	1,127,736.02		207,228.36	
பணிக்கொடைக்கான ஏற்பாடு		54,559,381.14		3,049,641.80	
பணிக்கொடை கொடுப்பனவுகள்		(20,496,702.14)		(13,774,173.80)	
இருப்புகளில் அதிகரிப்பு / (குறைவு)		(1,762,788.00)		(2,534,183.91)	
வருமதிகளில் அதிகரிப்பு / (குறைவு)		4,195,792.74		(15,124,143.89)	
வைப்புகள், முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்களில் அதிகரிப்பு / (குறைவு)		12,912,814.81		(29,969,420.26)	
குறுகிய கால முதலீடுகளில் அதிகரிப்பு / (குறைவு)		4,177,345.06		36,381,405.19	
சென்மதிகளில் அதிகரிப்பு / (குறைவு)		69,359,857.73		9,915,750.19	
			250,989,626.98		19,436,125.59
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்			63,818,618.63		36,323,396.88
முதலீட்டு நடவடிக்கைகள்					
இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு		(162,680,738.75)		(147,376,559.00)	
செயற்படு நிலை மூலதனம்		70,444,547.65		(38,041,665.85)	
நிலையான சொத்துகளின் விற்பனையின் தொடர்ச்சி		25,535.04		4,146.25	
வித்தியாசப்படும் வருமானம் சீராக்கல்		578,738.91			
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்			(91,631,917.15)		(185,414,078.60)
நிதி நடவடிக்கைகள்					
அரச நன்கொடைகள் (மூலதனம்)		50,208,270.31		126,777,061.58	
நன்கொடைகள்- SSDP		27,621,285.70		30,890,888.95	
பெற்றுக்கொண்ட உதவிகள்				24,657,364.19	
IETI எல்லைச்சுவர் நிதியம்				(2,198,176.30)	
நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்			77,829,556.01		180,127,138.42
காசு மற்றும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)			50,016,257.49		31,036,456.60
கால ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை			68,671,193.42		37,634,736.82
கால இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை			**118,687,450.91**		**68,671,193.42**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துகளில் ஏற்பட்ட மாற்றக் கூற்று

விபரம்	திரட்டப்பட்ட நிதி	அரச நன்கொடைகள் மூலதனம்	SSDP மூலதனம்	வித்தியாசப்படும் வருமானம் மூலதனம் (பொறுப்பு)	பெற்றுக்கொண்ட உதவிகள்	பகுதிநேரக் கணக்குகளில் இலாபம்	மோட்டார் சைக்கிள் சுழல்நிதி	பகுதிநேரம் மீதான மூலதன ஒதுக்கம்	பகுதிநேரம் மீதான கட்டாய ஒதுக்கம்	மொத்தம்
2019 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி	(832,388,817.12)	71,249,441.66	45,645,417.94	1,141,710,286.15	717,117,964.73	39,693,917.31	7,415,059.28	11,148,914.78	5,902,130.56	1,207,494,315.29
முன்னைய வருட சீராக்கல்										**0.00**
நூலக கணக்குக்கு மாற்றப்பட்ட நூலக நிதி										**-**
மீளக்குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதி	(832,388,817.12)	71,249,441.66	45,645,417.94	1,141,710,286.15	717,117,964.73	39,693,917.31	7,415,059.28	11,148,914.78	5,902,130.56	1,207,494,315.29
வருடத்தில் பெறப்பட்ட மூலதன நன்கொடை GOSL		55,500,000.00	74,179,792.67							**129,679,792.67**
மூலதன மறுசீரமைப்பு		(5,291,729.69)								**(5,291,729.69)**
வருடத்திதிற்கான இலாபம்	(187,171,008.35)					-				**(187,171,008.35)**
வருடத்திதிற்கான சீராக்கல்	1,995,757,765.37			-578,738.91		874,744.50				**1,996,053,770.96**
தானாக பிறப்பிக்கப்பட்ட இலாபம் இசைவாக்கம்	15,950,771.24									**15,950,771.24**
RDA இடமிருந்து பெறப்பட்ட உதவி										**0.00**
வித்தியாசப்படும் பொறுப்புக்கு மாற்றப்பட்டது		-110,244,680.12	-52,436,058.62	173,906,072.92	-603,514,405.18					**(592,289,071.00)**
வித்தியாசப்படும் வருமானத்திற்கு மாற்றப்பட்டது				-122,748,469.41						**(122,748,469.41)**
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**992,148,711.14**	**11,213,031.85**	**67,389,151.99**	**1,192,289,150.75**	**113,603,559.55**	**40,568,661.81**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**2,441,678,371.71**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

உடமை, இயந்திரங்கள், உபகரணங்கள்

	நிலம்	குத்தகைக்கு பெறப்பட்ட நிலம்	கட்டிடங்கள், மேம்பாடுகள்	இயந்திரங்கள், உபகரணங்கள்	தளபாடங்கள், பொருத்துகள், அலுவலக உபகரணங்கள்	கணினி உபகரணங்கள்	மோட்டார் வாகனங்கள்	நூலக புத்தகங்கள்	பயிற்சி உபகரணங்கள்	அருவச் சொத்துகள்	மொத்தம்
மதிப்பீடுகளுக்கான செலவுகள்											
வருட ஆரம்பத்தில்	47,244,518.74	72,600,542.92	1,080,970,409.56	41,949,686.09	301,541,472.56	401,392,704.56	126,319,944.07	11,297,774.65	1,323,113,923.88	-	3,406,430,977.03
குத்தகைக்கு பெறப்பட்ட நிலம்	-										0.00
சேர்: வருடத்தில் சேர்க்கப்பட்டது	924,400.00		1,653,758,578.39	48,561,208.02	11,509,209.73	10,158,234.00	34,500.00	1,220,938.42	16,758,162.97	5,915,388.06	1,748,840,619.59
சேர்/கழி: சீராக்கல்		281,168,483.72	(233,497,358.61)		-820,952.03	3,433,315.95			(11,448,130.92)	15,679,679.52	54,515,037.63
கழி: அகற்றல் சீராக்கல்											0.00
வருட இறுதியில்	**48,168,918.74**	**353,769,026.64**	**2,501,231,629.34**	**90,510,894.11**	**312,229,730.26**	**414,984,254.51**	**126,354,444.07**	**12,518,713.07**	**1,328,423,955.93**	**21,595,067.58**	**5,209,786,634.25**
திரட்டப்பட்ட தேய்மானம்											
வருட ஆரம்பத்தில்	-	9,080,072.25	692,739,005.67	34,551,104.94	203,579,834.49	331,499,795.51	125,829,561.61	10,464,586.09	851,887,354.22		2,259,631,314.78
சேர்: வருடத்தில் பதிவழிக்கப்பட்டது											0.00
சேர்: வருடத்திற்கான தேய்மானம்		775,690.65	110,661,789.23	3,280,246.50	24,815,944.21	24,840,964.75	111,894.50	192,913.38	75,267,588.43	1,573,418.78	241,520,450.43
சேர்/கழி: சீராக்கல்		4,628.00	(130,896,369.41)	1,863,365.84	(470,888.35)	(5,868,940.70)	-	-	(1,211,982.62)	4,154,171.66	(132,426,015.58)
கழி: அகற்றல் சீராக்கல்	-		-	-	-	-	-	-	-	-	-
வருட இறுதியில்	**0.00**	**9,860,390.90**	**672,504,425.49**	**39,694,717.28**	**227,924,890.35**	**350,471,819.56**	**125,941,456.11**	**10,657,499.47**	**925,942,960.03**	**5,727,590.44**	**2,368,725,749.63**
குறைக்கப்பட்ட மீதி											
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**48,168,918.74**	**343,908,635.74**	**1,828,727,203.85**	**50,816,176.83**	**84,304,839.91**	**64,512,434.95**	**412,987.96**	**1,861,213.60**	**402,480,995.90**	**15,867,477.14**	**2,841,060,884.62**
2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**47,244,518.74**	**63,520,470.67**	**388,231,403.93**	**7,398,581.15**	**97,961,638.07**	**69,892,910.05**	**490,382.46**	**833,188.56**	**471,226,394.66**	**-**	**1,146,799,488.29**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
கணக்கீட்டு கொள்கைகள்

பொதுவான கணக்கீட்டு கொள்கைகள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையானது (இதன் பின் "அதிகாரசபை" என குறிப்பிடப்படும்) இல. 971, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரியவில் அமைந்துள்ளது. இது 1990 இல. 20 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

2. தயாரிப்பதற்கான அடிப்படை

நிறுவனத்தின் நிதிக்கூற்றுகள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஆட்சி வடிவமைப்புக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.
இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.1 2019 நிதியாண்டில் தேசிய நிலையங்களின் பகுதிநேரக் கற்கைநெறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் இசைவாக்கத் தொகுதி மீதிகளுடனும் நிதிக்கூற்றுகளின் மீதிகளுடனும் இசைந்து போவதற்காக இசைவாக்கத் தொகுதிக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

3. ஒப்பீட்டு தகவல்கள்

3.1 முன்னைய வருட இலக்கங்களும் வாசகங்களும் இந்த வருட முன்வைப்புடன் ஒத்துப் போவதற்காக தேவையான இடங்களில் மீளமைக்கப்பட்டுள்ளது.

4. அரச நன்கொடைகளும் மானியங்களும்

4.1 நிறுவனம் தனது செலவுகளுக்காக தங்கியிருக்கும் அரச நன்கொடைகள் பெற்றுக்கொண்ட அடிப்படையில் கணக்கில் பதியப்பட்டுள்ளது. தொடர்ச்சியான செலவுகளுக்கான அரச நன்கொடைகள் நிதி செயற்பாட்டு கூற்றுகளில் ஒரு வரவாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், மூலதன செலவுகளுக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் நேரடியாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

4.2 சொத்துகளுக்காக வழங்கப்பட்ட நன்கொடைகளும் சொத்துகளை மாற்றுவதற்கான நன்கொடைகளும் அந்த சொத்துகளின் பிரயோசனமான பாவனைக்காலத்தின் அடிப்படையில் நிதி செயற்பாட்டு கூற்றுகளில் வித்தியாசப்படும் வருமானமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

5. சொத்துகளும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படையும்

5.1 இருப்பு
இருப்புகள் பொதுவாக அவற்றின் கிரயத்தில் மதிப்பிடப்பட்டதுடன் பாவனையிலில்லாத அச்சிடப்பட்ட திரவியங்களுக்காக 5% ஒதுக்கப்பட்டுள்ளது.

5.2 வருமதிகள்
வருமதிகள் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 31.12.2019 இல் உள்ளவாறு அதிகாரசபையில் சேவையில் இல்லாத ஊழியர்களின் அறவிடமுடியாக கடன்களுக்காக 100% ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளக கொடுக்கல் வாங்கல்களிலிருந்து உருவாகும் கடன்களைத் தவிர ஏனைய அனைத்து கடன்படுநர்களின் அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்காக 5% ஒதுக்கப்பட்டுள்ளது.

5.3 உடமை, இயந்திரங்கள், உபகரணங்கள்

(ய). அடையாளப்படுத்தலும் அளவீடும்
உடமை, இயந்திரங்கள், உபகரணங்களின் விடயங்கள் கிரயங்களிலிருந்து திரட்டப்பட்ட தேய்மானத்தை அல்லது சேத இழப்புகளைக் கழித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

(டி). கிரயம்

உடமை, இயந்திரங்கள், உபகரணங்களின் விடயங்கள் கிரயங்களானது அவற்றின் கொள்வனவு விலையையும் அவற்றின் பாவனை நோக்கத்திற்கான வேலை நிலைமைக்கு அந்த சொத்துகளை காண்டு வருவதற்கு நேரடியாக பங்களிக்கும் ஏதாவது செலவுகளையும் உள்ளடக்கியதாக அமையும்.
அதிகாரசபையின் செயற்பாட்டை நடாத்துவதற்கு அல்லது அதிகரிப்பதற்காக சொத்துகளின் நிலையான இயல்புகளை சேர்த்தல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கங்களுக்கான தொடர்ச்சியான செலவீனங்கள் மூலதன செலவீனங்களாக கணிக்கப்பட்டுள்ளன.

(உ). குறைந்த ஆயுள் கொண்ட இருப்புகள்

குறைந்த ஆயுள் கொண்ட மற்றும் மூலதனமாக்க முடியாத இருப்புகள் நிதி செயற்பாட்டு கூற்றில் பதிவழிக்கப்பட்டுள்ளன. எனினும் கட்டுப்பாட்டு நோக்கத்துக்காக இந்த பொருட்கள் இருப்பெடுக்கப்பட்டதுடன் பௌதிக கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

(ன). தேய்மானம்

தேய்மானமானது சொத்துகளின் பயன்படு ஆயட்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்பட்டுள்ளது

சொத்து வகை	**தேய்மான வீதம்**
குத்தகைக்காணி	குத்தகைக்காலத்திற்கு
கட்டிடங்கள்	5%
இயந்திரங்கள், உபகரணங்கள்	10%
தளபாடங்கள், பொருத்துகள், அலுவலக உபகரணங்கள்	10%
கணினி உபகரணங்கள்	25%
நூலக புத்தகங்கள்	10%
மோட்டார் வாகனங்கள்	25%
அருவச் சொத்துகள்	10%

5.4 காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புகள், குறுகிய கால அதிக திரவத்தன்மை கொண்ட உடனடியாக காசாக மாற்றக்கூடிய முதலீடுகள் என வரையறுக்கப்பட்டுள்ளன.
காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு, குறுகிய கால முதலீடுகள், இடைவழியிலுள்ள காசு ஆகியவை காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்பட்டுள்ளன.

6. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் தினத்தில் அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், காணப்படுகின்ற ஆனால் அவற்றின் பெறுமதி துல்லியமாக தீர்மானிக்கப்பட முடியாத பொறுப்புகளுக்காக போதிய ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐந்தொகைத் தினத்திலிருந்து ஒரு வருடத்தினுள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகள் நிதிநிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாகக் காட்டப்பட்டுள்ளது. ஐந்தொகைத் தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகள் நிதிநிலைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளாகக் காட்டப்பட்டுள்ளது.

6.1 பணிக்கொடைக்கான ஏற்பாடு

எல்லா ஊழியர்களுக்கும் சேவையின் ஆரம்ப வருடங்களிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் 1983 இல. 12 பணிக்கொடைச் சட்டம் மற்றும் SLAS 16 ஆகியவற்றுக்கிணங்க ஒரு ஊழியருக்குச் செலுத்த வேண்டிய பொறுப்பு அவர் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவையாற்றிய பின்னரே எழும்.

6.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

ஒரு வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்களுக்கான பங்களிப்புகளுக்கான பொறுப்புகளானது ஒரு
வருமானக்கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதிகாரசபையானது ஊழியர்களின் வேதனத்தில் 15% மற்றும் 3% இற்குக் குறையாத தொகையை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பங்களிப்பு செய்கின்றது.

7. வருமானம்

அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகளும் தொடர்ச்சியான செலவுகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உதவிகளும் அதிகாரசபையின் நானாவித வருமானங்களும் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பாரிய திருத்தங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகைகளும் மூலதன நன்கொடைகளுக்கு அப்பாலான மூலதனச் சொத்துக்களின் மேம்பாடுகளுக்காக செலவழிக்கப்பட்ட தொகைகளும் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டதுடன் சமமான தொகை மூலதன நன்கொடையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

மிகை / (பற்றாக்குறை) அல்லது செலவுகளுக்கு லேதிகமான வருமானம் என்பது, அனைத்து அறிந்த பொறுப்புகளுக்கும் நிலையான சொத்துகளுக்கான தேய்மானத்திற்குமான ஏற்பாடுகளை மேற்கொண்டதன் பின்னர் அடையப்பட்டுள்ளது.

அதிகாரசபையை நடாத்திச் செல்வதற்கும் அதன் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனான நிலையில் பராமரிப்பதற்குமாக ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளன.

8. மூலதன அர்ப்பணிப்புகளும் தொடர்ந்த பொறுப்புகளும்

அனைத்து மூலதன அர்ப்பணிப்புகளும் தொடர்ந்த பொறுப்புகளும் கருத்தில் கொள்ளப்பட்டு தேவையான சீராக்கல்கள் அல்லது வெளிப்பாடுகள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9. ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகளின் நிகழ்வுத்தன்மைகள் கருத்தில் கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. காசுப்பாய்ச்சற் கூற்று

வித்தியாசப்படும் வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு காசுப்பாய்ச்சற் கூற்றில் காசு அல்லாத நடவடிக்கையாக காட்டப்பட்டுள்ளது.

தலைவர்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 7 இல் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டிராத காரணத்தினால் ரூ. 125,829,561 கிரயமான மோட்டார் வாகனங்கள் முழுமையாகத் தேய்விடப்பட்டிருப்பினும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன. அதனால் ஏற்பட்ட மதிப்பீட்டுத் தாக்கத்தை இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய மீள திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அதிகார சபையின் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத் தேய்வினை கணிப்பிடும் போது ஏற்பட்ட தவறினால் மீளாய்வு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கிரயமானது ரூ. 1,036,737 ஆல் குறைத்துக் கணக்கிடப்பட்டமையினால் அக் குறைபாடு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட காணிக்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய ரூ. 6,070,000 பெறுமதியான குத்தகைப்பணம் கடந்த ஆண்டின் இலாபத்துடன் சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வு ஆண்டின் செலவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அத் தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2019 ஆம் ஆண்டிற்கான 39 கொடுப்பனவு வவுச்சர்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அவற்றின் மொத்த பெறுமதி ரூ. 3,634,377 ஆகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகை தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலை ஒன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டு பிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக உருவாகக் கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புகளை நான் மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான வினைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகக் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்றத் தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்றத் தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாது இருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. **ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளத் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ளத் தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு அதிகாரசபை முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக் கூடியனவாகும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனும் ஒருவருக்கு அதிகாரசபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை	
i. நிதி ஒழுங்குவிதி 138	வவுச்சர் ஒன்றிற்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் வவுச்சர் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதும், கொடுப்பனவை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட்டிருப்பினும் அதற்கு முரணாக தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவனம் ரூ. 385,905 பெறுமதியான 10 கொடுப்பனவு

	வவுச்சர்கள் சான்றுப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.
ii. நிதி ஒழுங்குவிதி 757(2)	ஆண்டின் இறுதியில் சகல இருப்பு கணிப்பீட்டு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்க்கப்பட்டிருப்பினும் தலைமை அலுவலகம் மற்றும் 06 மாவட்ட அலுவலகங்களுக்கான இருப்பு கணிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 இலக்கங் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கை. i. நிதி ஒழுங்குவிதி 371/ 5 ஆம் பந்தி	கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மேலதிகமாக தீர்ப்பனவானது தாமதிக்காதவிடத்தும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூ. 3,823,220 தீர்க்கப்படாத உபகட்டுநிதி மீதியாகக் காணப்பட்டது.
ii. நிதி ஒழுங்குவிதி 371(2)b பந்தி	சந்தர்ப்பமொன்றில் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரிடம் அதிகபட்சமாக ரூ. 100,000 நிமித்த உபகட்டுநிதி செய்யப்பட்டிருப்பினும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் 7 சந்தர்ப்பங்களில் ரூ. 108,800 தொடக்கம் ரூ. 397,270 வரை நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து சபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், உற்பத்தித்திறன் மிக்கதாகவும் குறித்த காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகையை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்றும்,

(அ) பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆகிய பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீட்டைத் தயாரிக்காமலும் வழிகாட்டல்கள் கோவையின் 5.3.1 (ஈ) ஆம் பந்திக்கு முரணான வகையில் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறாமல் விலைமனு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவகத்தின் பழைய இரண்டுமாடி கட்டிடமானது 2018 ஆம் ஆண்டில் ரூ. 8,381,900 ஐ செலவில் புதுப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அவ் விடுதியின் பயன்பாட்டிற்காக 2019 ஆம் ஆண்டு ரூ. 485,185 செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் கட்டிடமும் உபகரணங்களும் 2021 யூன் மாதம் வரை பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவகத்தின் கீழ் காணப்படும் அச்சகப் பிரிவிற்கான காகிதாகிகளை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 4.4.2 ஆம் பந்திக்கு முரணான

வகையில் போட்டியுடனான விலைமனு கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்யப்படுவதனை தவறியமையால், தலைவரினால் அங்கீகாரம் வழங்கக்கூடிய கொள்வனவுகளின் எல்லை வரையில் கொள்வனவுகள் பகுதிகளாக பிரிக்கப்பட்டு ரூ. 500,000 எல்லையின் கீழ் ஒரேயொரு நிறுவனத்தில் மாத்திரம் விலைமனுக் கோரல் இன்றி பல்வேறு வகையான விலைகளின் கீழ் மீளாய்வாண்டில் ரூ. 8,850,721 தொகைக்கு அச்சீட்டுக்கான காகிதாகிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இக் காரணத்தினால் நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடிய கழிவு மற்றும் அதிக போட்டிகரமான நிலைமையில் கிடைக்கக்கூடிய பொருளாதார நன்மை இழக்கப்பட்டிருந்தன. அவ்வாறே காணப்படும் இருப்பு மீதிகளை கருத்தில் கொள்ளாது கொள்வனவு செய்தமையினால் அச்சு நிறப்பூச்சு மற்றும் 11 வகையான பல்வேறு மூலப்பொருட்களுக்கான 92 உருப்படிகள் காலாவதியாகி இருந்தன.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவகத்தின் பயிலுநர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட தளபாடங்களை விற்பனை செய்யும் நோக்கில் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 18,847,771 தொகையை செலவில் நிறுவன வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட காட்சிக்கூடக் கட்டிடமும், 2 தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவகங்களில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 2,863,475 தொகையினையும், ரூ, 790,500 தொகையினையும் செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தமாக ரூ. 110,783,640 தொகையான பெறவேண்டிய கடன் மீதியில் 2 ஆம் வருடத்திலிருந்து 14 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் அறவிடப்படாமல் இருந்த ரூ. 38,245,776 தொகையான பல்வேறு வகையான கடன்பட்டோர் மீதிகளில் ரூ. 966,107 தொகையான ஊழியர் கடன்தொகை சேர்க்கப்பட்டிருந்ததோடு, இக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூ. 265,123,534 தொகை செலுத்த வேண்டிய மீதியில் 2 ஆம் ஆண்டு தொடக்கம் 12 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய முற்பணங்கள், செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளில் பல்வேறு கடன்கொடுத்தோர்களின் மொத்த பெறுமதியான ரூ. 60,006,839 தொகையும் உள்ளடக்கப்பட்டிருப்பதோடு, இக் கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய பயிலுநர் பயிற்சி நிறுவனம் ஒன்றின் கட்டுமானப் பிரிவில் பல்நோக்கு கட்டுமான கற்கைநெறிக்கு 2018 ஆம் ஆண்டிற்குப் பின் பயிலுநர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு கற்கைநெறிகள் நடாத்தப்படாத காரணத்தினால் 84 உபகரணங்களுக்கான 3,459 உருப்படிகள் அழிவடைந்துக் கொண்டு இருப்பது 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தின் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீசீலனையில் அவதானிக்கப்பட்டது.

டப்ளியூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2019 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் நடைமுறை அல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களுக்கான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படாததோடு, தேசிய கணக்காய்வு நிறுவனத்தினால் இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி 2020 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அம் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இத் தவறு 2020 ஆம் ஆண்டின் Journal Voucher இலக்கம் 803/808 மற்றும் 809 மூலமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

(இ) பதுளை மாவட்ட அலுவலகத்தின் காணி ஒன்றிற்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் செலுத்த வேண்டிய குத்தகை மீதியொன்று காணப்பட்டதோடு, அச் செலுத்த வேண்டிய மீதிக்கான ஏற்பாடுகள் இறுதி நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் 2019 ஆம் ஆண்டில் இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு, 2007 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரைக்குமான அத் தொகை (ரூ. 60,70,000) நிறுத்தி வைத்த இலாபத்தில் சீராக்க வேண்டி இருப்பினும், தவறான கணக்கு வைத்தலின் காரணமாக அத் தொகையானது 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்குரிய இவ் 39 வவுச்சர்கள் தொடர்பாக மிக விரைவில் ஆராய்ந்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.2 சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான தொடர்பு

(அ)

i. நிதி ஒழுங்குவிதி 138

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் கவனக் குறைவினால் குறித்த வவுச்சர் பத்திரங்கள் சான்றுப்படுத்தப்படாததோடு, இதன் பின்னர் இவ்வாறான கவனயீனங்கள் ஏற்படாதவாறு செயற்படுவதற்கு குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. நிதி ஒழுங்குவிதி 757(2)

2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் சகல அலுவலகங்களும் உள்ளடங்கும் வகையில் இருப்பு கணிப்பீட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததோடு, திடீரென உருவாகிய கொவிட் 19 பெருந்தொற்று நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நாடுபூராகவும் ஊரடங்குச் சட்டத்தை அமுலாக்கம் செய்தமையினால் தலைமைக் காரியாலயத்தின் இரண்டு உப பிரிவுகளினதும், கேகாலை, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய இடங்களிலும் கணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. ஏனைய சகல இடங்களுக்குமான கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணிப்பீட்டு அறிக்கைகள் அரச கணக்காய்வுப் பிரிவிற்கு பொறுப்பளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டில் இவ்விடங்கள் உள்ளடங்கும் வகையில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 இலக்கங் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

i. நிதி ஒழுங்குவிதி 371/5 ஆம் பந்தி

சில மாவட்ட அலுவலகங்களில் 2019.12.31 ஆந் திகதிக்கு கணக்குகளை மூடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கி இருப்பினும் கணக்குகள் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. தற்போது சகல கட்டுநிதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதோடு, இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii. நிதி ஒழுங்குவிதி 371/(2) b பந்தி

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2.2.4 பெறுகை விதிகளை அமுலாக்கம் செய்யும் போது ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை எதிர்காலத்தில் ஏற்படாத வகையில் குறித்த உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) தற்போது அக் கட்டிடம் பணிப்பாளரின் (பயிற்சி) கீழ் பயிற்சி நிலையமாக பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர் விடுதிக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீள பயன்படுத்தும் வரையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) அச்சீட்டு நடவடிக்கைகளுக்காகக் கட்டளை ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதற்குத் தேவையான நிறப்பூச்சுகள் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நீண்ட காலம் எடுப்பதன் காரணமாக அச்சீட்டு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதத்தைக் குறைத்துக் கொள்வதற்காக இம் முறை

பின்பற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இதன் பின்னர் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அப்போது அச்சீட்டுப் பிரிவில் களஞ்சிய வசதிகள் இல்லாத காரணத்தினாலும், காணப்பட்ட நிதிக் கஷ்டங்களினாலும் சந்தர்ப்பத்திற்கேற்ப தேவைப்பாடுகளை இனங்கண்டு மூலப்பொருட்கள் அதற்கேற்றவாறு வழங்கப்பட்டுள்ளன. தற்போது களஞ்சிய வசதிகள் கிடைத்துள்ளமையினால் எதிர்காலத்திற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் கிடைக்கப் பெற்ற மூலப்பொருட்களில் சில காலாவதியாகி உள்ளன. குறித்த காலப்பகுதியில் அச்சு இயந்திரத்தை (PM 74) இயக்காமல் வைத்திருந்தமையும், இயந்திரங்களை இயக்குபவரின் பதவி வெற்றிடமாக இருந்த காரணத்தினாலும் அச்சீட்டு நடவடிக்கைகள் நடைபெறாது சில நிறப்பூச்சுகள் காலாவதியாகி விட்டன. அச்சீட்டுக்கான கடதாசி வகைகள் பின்னர் பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது வருடாந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதோடு, எதிர்காலத்தில் அச்சீட்டுப் பிரிவின் தேவைப்பாடுகளை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த பொருட்களைக் கட்டளையிடுவதற்கு கணக்கு பிரிவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அச்சீட்டு செயற்பாடுகளை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காக அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, இனிவரும் காலங்களில் விலைக் கழிவுகள் மற்றும் போட்டியிடல் மூலம் பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பொருட்களை கொள்வனவு செய்யும் செயல்முறைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.3 <u>ஏனைய விடயங்கள்</u>

(அ)

இனிவரும் காலங்களில் இக் கண்காட்சிக் கூடத்தின் கட்டிடத்தை நிர்வாக ரீதியான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான நீர்வழங்கலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, மும்முனை மின்வலுவை பெற்றுக் கொள்வதற்கும் (அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்) எதிர்பார்க்கப்படுகின்றது. உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

அப்போதைய தலைவரின் ஆலோசனைகளின் பிரகாரம், இவ் உடற்பயிற்சி மத்திய நிலையமானது ரூ. 790,500.00 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டதோடு, அதற்கான உபகரண விநியோகம் 2019.09.19 ஆந் திகதியன்று பூர்த்தியடைந்தது. அதற்கு

அவசியமான தரை விரிப்புகளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் நிலுவையாக இருந்த காரணத்தினால் தாமதமடைந்தது. அத்தோடு, 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று நிலைமை காரணமாக சுகாதார பாதுகாப்புக் கருதி அவற்றைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் இப் பெருந்தொற்று நிலைமை குறைவடைந்த பின்னர் இந் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் ரூ. 2,863,475.00 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட Paper Folding இயந்திரத்திற்காக அரச அச்சகத்தினால் குறித்த விவரக் குறிப்புகள் மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதோடு, அதன்படி தொழினுட்ப குழுவின் மூலமாக சிபாரிசுகளை வழங்குவதற்கு பிரிவுத் தலைவரிடம் (அச்சு) எழுத்துமூலமான அறிவுறுத்தல்களை 2021.07.16 ஆந் திகதியில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ)
கிடைக்க வேண்டிய ரூ. 110,783,640.00 தொகையில் ரூ. 62,378,491.00 தொகையானது பதவியணியினரின் கடன்கள் மற்றும் முற்பணங்களாகும். அத் தொகையில் ரூ. 966,107.00 தொகை நிறுவனத்திலிருந்து நீங்கிச் சென்ற பதவியணி அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக இருப்பதோடு, அத் தொகையை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, எஞ்சிய பதவியணியினரின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அவர்களின் மாதாந்த சம்பளத்தில் அறவிடப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கீட்டு அறிக்கைகளில் பல்வேறு கடன்பட்டோர் மீதி ரூ. 48,405,148.36 தொகையாக காணப்பட்டதோடு, அதில் ரூ. 29,980,878.00 தொகையானது SSDP கருத்திட்டத்திடம் அறவிடப்பட வேண்டிய தொகையாகும். அத்தொகையை கொடுக்க இயலாது எனக் கருத்திட்டத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால், அம் மீதியை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ. 11,296,974.00 தொகையானது 2020.12.31 ஆந் திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதோடு, மேலும் அறவிடப்படவுள்ள மீதி ரூ. 7,127,295.00 தொகையாவதோடு, இத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய மீதியான ரூ. 265,123,534.00 தொகையில் ரூ. 74,131,406.00 தொகை செலுத்த வேண்டிய வைப்புத் தொகையாவதோடு, அதில் ரூ. 4,567,683.00 தொகையானது 2020.12.31 ஆந் திகதியில் தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையில் ரூ. 33,121,919.00 தொகையானது பயிலுநர் நலன்புரி நிதியத்தின் மீதியும் உள்ளடங்கி இருப்பதோடு, அது பயிலுநர்கள் கோரும் போது செலுத்தப்படும் நிதியாகும்.

பல்வேறு கடன் கொடுத்தோர் மீதி ரூ. 33,444,322.00 தொகையாவதோடு, அதில் ரூ. 11,242,366.00 தொகையானது 2020.12.31 ஆந் திகதியின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. அட்டுறு செலவுகள் மீதி ரூ. 157,501,878.00 தொகையாவதோடு, அது 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) நிறுவனத்தில் இயங்கிய 05 பயிற்சிப் பிரிவுகளின் கூட்டிணைப்பின் மூலம் பல்நோக்கு கட்டுமானக் கற்கைநெறியானது ஆரம்பிக்கப்பட்டது.

1. மரவேலைகள் தொழினுட்ப பிரிவு
2. கட்டுமானப் பிரிவு
3. மின்சாரப் பிரிவு
4. குளிரூட்டி மற்றும் வளிசீராக்கிப் பிரிவு
5. இயந்திரவியல் பிரிவு

மேற்குறித்த சகல பிரிவுகளினதும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் இக் கற்கைநெறிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, அக் கற்கைநெறிக்கென ஆயுத உபகரணங்கள் விசேடமாக கொள்வனவு செய்யப்படவில்லை. 2018 ஆம் ஆண்டின் பின்னர் இக் கற்கைநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாத காரணத்தினால் கற்கைநெறியை நடாத்திச் செல்வதற்கு இயலாது போனமையால், மேற்குறித்த பிரிவுகளின் மூலம் நடாத்தப்படும் முழு நேரக் கற்கைநெறிகளுக்காக குறித்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.